




# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்



மலர்: 05, இதழ்: 189 குரோதி வருடம், மாசி மாதம் 29ஆம் திகதி வியாழக்கிழமை
(13.03.2025) ஹிஜ்ரி 1446, ரமழான் - 12, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12








சம்பியன்களின் சம்பியன் பக்கம் 03

World Kidney Day
13 MARCH 2025

உங்களின் சிறுநீரகங்கள் நலமாக உள்ளனவா? பக்கம் 04



கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா நாளை பக்கம் 10

17 ஆண்டுகளின் பின் இலங்கை மண்ணில் நடைபெறவுள்ள SAFF சம்பியன்ஷிப் பக்கம் 12




# முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு!


## புதிய அரசியல் கூட்டணி உதயம்

### உள்ளூராட்சித் தேர்தலில் இறங்கவும் ஆலோசனை



முஸ்லிம் அரசியல்வாதிகளை உள்ளடக்கிய முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கூட்டணி விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

முஸ்லிம் அரசியல் கட்சிகள், முன்னாள் அமைச்சர்கள், எம்.பிக்கள் என முக்கியமான தரப்புகள்... » 02 பக்கம்



மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக பஞ்சரத தேர் பவனி....

படப்பிடிப்பு: எஸ்.ராமதாஸ்

## அநுராதபுரம் வைத்தியர் துஷ்பிரயோகம்; சந்தேகநபர் கல்னேவவில் கைது



» 02பக்கம்

## தேசபந்துவின் ரிட் மனு மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு



முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் 17ஆம் திகதி அறிவிப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (12) உத்தரவிட்டது. » 02 பக்கம்

## மஹிந்த யாப்பா பயன்படுத்திய வாகனங்களுக்கு ரூ.59 மில். செலவு

### ஈராண்டு அறிக்கையை சமர்ப்பித்தார் பிமல்



முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 2023 - 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் பயன்படுத்திய அரச வாகனங்களுக்காக மொத்தம் 59 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் ... » 02 பக்கம்



கமெண்ட் கந்தர்

இந்த குரங்குகளை பிடிக்க 5 நிமிடம் ஒதுக்குறது போல, தலைமறைவாகியுள்ள ஆட்களை பிடிக்கவும் ஒரு 5 நிமிடத்தை ஒதுக்கலாமே அரசாங்கம்...

## நளீம் எம்.பி. விரைவில் இராஜிநாமா

றிப்தி அலி



ஏறாவூர் நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை எம்.எஸ். நளீம் இராஜிநாமாச் செய்யவுள்ளதாக ஸ்ரீலங்கா... » 02 பக்கம்






## கிழங்குக்கான இறக்குமதி வரியை அதிகரிக்க வேண்டும்

### இராதா எம்.பி. சபையில் வலியுறுத்து



“கிழங்கு இறக்குமதியை ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களில் நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறில்லாவிட்டால் கிழங்குக்கான இறக்குமதி வரியை அதிகரிக்க வேண்டும்” - என மலையக மக்கள் முன்னணியின்... » 02 பக்கம்



உஷ்

தேசபந்து தென்னக்கோன் முக்கியமான அரசியல்வாதியொருவரின் இல்லத்தில் மறைந்திருக்கலாம் என்று பாதுகாப்புத் தரப்பில் கருதப்படுகிறது.

ஆனால், அந்த இடத்தில் தேடுதல் நடத்துவதற்கு விசேட உத்தரவு தேவை என்பதால் அதற்காக காத்திருக்கிறதாம் பாதுகாப்புத் தரப்பு.

எப்படியோ நிலைமை விபரீதமாயுள்ளதால் தேசபந்து, சட்டத்தரணிகளுடன் சரணடையும் வாய்ப்பும் இருப்பதாக மற்றுமொரு தகவல் சொல்கிறது.

## ஐ.தே.க. நிகழ்வில் ரணில்; அமைப்பாளர்களுடன் முரண்

புறக்கோட்டையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் சிறி கொத்த தலைமை அலுவலகத்தில் நேற்று (12) இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில், அமைப்பாளர்களுக்கும் கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி... » 02 பக்கம்





# தமிழீழ விடுதலைப் புலிகளால் வனவளம் பாதுகாக்கப்பட்டது; மக்களின் காணிகள் அரசாங்க திணைக்களங்களால் திருட்டு

## ரவிகரன் எம்.பி. சபையில் குற்றச்சாட்டு

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப் பகுதிகளில், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் மக்களின் விவசாய மற்றும் குடியிருப்புக் காணிகளை அத்துமீறி திருடியுள்ளதாகவும் வனவளத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் பாதுகாத்ததாகவும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

அதேவேளை இவ்வாறு மக்களின் காணித் திருட்டில் ஈடுபடும் திணைக்களங்களில் ஒன்றான வனவளத் திணைக்களம் வன்னியில் இடம்பெறும் சட்டவிரோத காடழிப்புச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, வனவளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் தெரிவித்தார். கடந்த 2009ஆம் இற்கு முன்பு மரக்குற்றிகளால் நிரப்பப்பட்ட கனகரக வாகனங்களைக் கண்டதில்லை எனவும், மரம் அரிகின்ற இயந்திர வாள்களின் கொடூர ஓசையைக் கேட்டதில்லை எனவும் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், வனவளத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் பாதுகாத்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றில் நேற்று (12) உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முன்னைய ஆட்சியில் திணைக்களங்களால் காணித் திருட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தங்களுடைய ஆட்சியில் இவ்வாறான காணித் திருட்டுக்கள் நீக்கப்படவேண்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பு எப்போதும் காடுகளை அதிகமாகக்கொண்ட நிலப்பரப்பாகவே காணப்படுகின்றது. இங்குள்ள மக்களின் வாழ்வு தொன்றுதொட்டு இயற்கையோடு இணைந்ததொன்றாகவே காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் என்றும் இயற்கையோடு முரண்பட்டுக் கொண்டதில்லை. காடுகளை அழித்ததில்லை. 2009ஆம் ஆண்டுவரை வெட்டப்பட்ட மரக்குற்றிகளால் நிரப்பப்பட்ட கனரக வாகனங்கள் எம் வீதியால் சென்றதை நாம் கண்டதில்லை.

மரம் அரிகின்ற இயந்திர வாள்களின் கொடூர ஓசையை நாம் கேட்டதில்லை. 2009ஆம் ஆண்டு வரை வனவளத் திணைக்களமும் வனஜீவராசிகள் திணைக்களமும் இங்கு எமது இடத்தில் இருக்கவில்லை. ஆனாலும் விடுதலைப் புலிகளின் வனவளப்பிரிவு இருந்தது. இயற்கையை நேசித்த வன்னியர்களின் வாழ்க்கைமுறை இருந்தது. இதனால் வனப்பகுதிகள் அழிக்கப்படவில்லை. காடுகள் அழிக்கப்பட்டு மரங்கள் வெட்டு மரங்களாகவும், விறகுத் தேவைகளுக்காகவும் பெருநகரங்களை நோக்கி ஏற்றிச்செல்லப்படவில்லை. காடுகள் மிகவும் கவனமாக காவல் செய்யப்பட்டன.

கடந்த 2010ஆம் ஆண்டிலும் அதன்பின்னரும் தான் வனவளத் திணைக்களத்தினதும் வனஜீவராசிகள் திணைக்களத்தினதும் நிர்வாகம் இங்கு நிலைநிறுத்தப்பட்டது. இதன் பின்னர்தான் வன்னிப்பெருநிலப் பரப்பின் காடுகள் குறையாடப்பட்டன.

மன்னாரில் முசலி உட்பட குறிப்பிட்ட சில இடங்களிலும் வவுனியாவில் பம்பைமடு உள்ளிட்ட சில குறிப்பிட்ட இடங்களிலும் அடர்காடுகள், ஒதுக்கப்பட்ட வனப்பகுதிகள் ஈவுஇரக்கமற்று கனகரக இயந்திரங்களால் மூர்க்கத்தனமாக சிதைக்கப்பட்டன. இவைகள் வனவளத் திணைக்களத்தின் அபகரிப்புக்கள் அல்லது திருட்டுக்களாகவே கருதப்படவேண்டும்.

google earth time Line ஊடாகப் பாருங்கள் 2009ன்முன்பு வன்னிப் பெருநிலப் பரப்பில் வனவளம் எவ்வாறு பாதுகாக்கப்பட்டது என்பதையும் 2009ன் பின்பு வனப்பகுதிகள் எவ்வாறு சூறையாடப்பட்டது என்பதையும் அறியமுடியும்.

இன்றுவரை வனவளத் திணைக்களத்தின் செயற்பாடுகள் மிகவும் ஊழல் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. இதேபோலத்தான் வனஜீவராசிகள் திணைக்களமும் இங்கு செயற்பட்டு வருகின்றது. இவ்வாறு வனப்பகுதிகள், இயற்கை வாழ்விடங்கள் என்பவை சூறையாடப்படுவதற்கு காரணமாக இருக்கும் இத்திருட்டுத் திணைக்களங்கள் 2010ன் பின் எங்கள் வீட்டுமுற்றங்களையும் வயல் நிலங்களையும் தோட்டந் துரவுகளையும் ஏன்... வீதிகளையும் இடுகாடுகள், சுடுகாடுகளையும்கூட திருடத்தொடங்கி விட்டார்கள்.

2009ஆம் ஆண்டின் பின்னர் தற்போது நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்களையும் விதிகளையும் புறக்கணித்து மாவட்டச்செயலாளருக்கோ பிரதேசச் செயலாளருக்கோ தெரியப்படுத்தாது, நிலஅளவைத் திணைக்களத்தின் ஊடாக வரைபடங்களையும் பெற்றுக்கொள்ளாமல், முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் 167,487 ஏக்கர் நிலப்பரப்பு வனவளத்திணைக்களத்தால் வனப்பிரதேசமாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டசெயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேபோல் 2009ஆம் ஆண்டின் பின்னர் வனஜீவராசிகள் திணைக்களத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 10,119 ஏக்கர் நிலப்பரப்பு நந்திக்கடல் இயற்கை வாழ்விடமாகவும் 10,925 ஏக்கர் நிலப்பரப்பு நாயாறு இயற்கை வாழ்விடமாகவும் சுண்டிக்குளம் தேசிய பூங்கா என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பரிவிலும் சேர்த்து 48,357 ஏக்கர் பிரதேசத்தையுமாக மொத்தம் 69,401ஏக்கர் பிரதேசத்தை வனஜீவராசிகள் திணைக்களம் தங்களுடைய ஆளுகைக்குள் கொண்டு வந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன - என்றார்.

# விசர் நாய்க்கடிக்குள்ளாகி ஒரேநாளில் 07 பேர் வைத்தியசாலையில் அனுமதி!

(கே. எ. ஹமீட்)

சம்மாந்துறை செந்நெல் கிராம பகுதியில் நேற்று (12) புதன்கிழமை விசர் நாய்க்கடிக்குள்ளாகி 7 பேர் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 3 வயது தொடக்கம் 35 வயதுக்குட்பட்டவர்கள் இவ்வாறு விசர் நாய் கடிக்குள்ளாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.


இதன்போது, குறித்த பகுதி இளைஞர் களினால் நாய் தாக்கப்பட்டு இறந்துள்ளது.



நாயின் தலைப் பகுதியை அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலும், இச்சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத், பிராந்திய தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். ஏ. சி. எம். பஸால், மாவட்ட மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம். லாபீர் ஆகியோரின் ஆலோசனையில் நாளை அப் பிரதேசத்திலுள்ள கட்டாக் காலி நாய்களுக்கு தடுப்பூசி வழங்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தபாலமூல வாக்களிப்புக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு


Election Commission
MEDIA RELEASE
2025.03.12

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஏற்றுக்கொள்ளப்படும் கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இத தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விரும்பும் அரச ஊழியர்களின் விண்ணப்பங்கள் மார்ச் 03ஆம் திகதி முதல் 12ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படுமென முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது.

குறித்த விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படும் தபால்களில் ஏற்படக்கூடிய காலதாமதங்களையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளையும் கருத்தில்கொண்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கால அவகாசம் எதிர்வரும் 17ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## அநுராதபுரம்...

(பிர்தௌஸ்)

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் வைத்தியராக பயிற்சிபெற்று வந்த பெண் வைத்தியர் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை அநுராதபுரம் கல்னேவ பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கல்னேவ, புதிய நகர பிரதேசத்தைச் சேர்ந்த கிரிபண்டலாகே நிலந்த மதுர ரத்நாயக்க என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபர் வேறு வழக்கொன்று தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. 34 வயதுடைய சந்தேகநபர் பிக்குவாகவும் இருந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலும் இவர் இராணுவ சேவையிலிருந்து தப்பிச் சென்றிருந்த நிலையில் கல்னேவ விசேட பொலிஸ் குழுவினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர் வைத்தியரை துஷ்பிரயோகம் செய்ததன் பின்னர், வைத்தியரின் இரு தொலைபேசிகளில் ஒரு தொலைபேசியை எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளதுடன், காணாமல்போன தொலைபேசி இருக்கும் இடம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற சமிக்ஞைகளுக்கமைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அதன்போது அவுகன புகையிரத நிலையத்துக்கு அருகில் தொலைபேசி சமிக்ஞை இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக பொலிஸாரினால் அந்த பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து சந்தேகநபர் கல்னேவ, எலபதுகம பிரதேசத்தில் தலைமறைவாகியிருந்த நிலையில் கல்னேவ பொலிஸ் விசேட குழுவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணராக பயிற்சி பெற்றுவந்த 32 வயதுடைய வைத்தியரொருவர் கடந்த 10ஆம் திகதி இரவு வழமைபோல் அந்த வைத்தியசாலைக்கு கடமைக்கு வந்துள்ளார். கடமை முடிந்து இரவு விடுதிக்குச் சென்றுள்ளார். அவரின் பிரத்தியேக இல்லத்துக்கு உள்நுழைந்தபோது வைத்தியரை பின்தொடர்ந்து இனந்தெரியாத நபர் கத்தியை வைத்து அச்சுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து குறித்த பெண் வைத்தியர் இவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் வைத்தியரின் தொலைபேசியை எடுத்துச்சென்றதால் இந்தச் சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தில் வைத்தியர் மீண்டும் வைத்தியசாலைக்குச் சென்று தனது தந்தைக்கு தொலைபேசி அழைப்பெடுத்து தனக்கு நேர்ந்த அவலம் தொடர்பில் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## முஸ்லிம் தேசிய...

இந்த கூட்டமைப்பில் அங்கம் வகிக்கவுள்ளன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த கூட்டணியில் அங்கம் வகிக்கவில்லையென தெரிகிறது.அக்கட்சியை உள்வாங்க பல அரசியல் பிரமுகர்கள் விருப்பமின்மையுடன் இருப்பதே இதற்கான காரணமென சொல்லப்படுகிறது.

முஸ்லிம் அரசியல் பிரமுகர்களான ரிஷாத் பதியுதீன் ,அதாவுல்லாஹ் ,அலிஸாஹிர் மௌலானா ,ஹாபீஸ் நஸீர் அஹ்மத்,ஹரீஸ் உட்பட்ட அரசியல் பிரமுகர்கள் இதுதொடர்பில் நீண்ட ஆலோசனைகளை நடத்தியிருப்பதாக அறியமுடிந்தது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரியவந்தது.

## ஐ.தே.க. கட்சி...

ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் முரண்பாட்டு நிலை ஏற்பட்டுள்ளது.

கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. இதன்போது, ஆசன அமைப்பாளர் நியமனங்கள் தொடர்பில் தொகுதி அமைப்பாளர்கள் சிலருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும்... ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வந்த தொகுதி அமைப்பாளர் ஒருவர் முன்னாள் ஜனாதிபதி ரணிலிடம், சேர் உங்களிடம் ஒரு விடயம் கூற வேண்டும். கட்சிக்காக அதிகம் பணியாற்றியிருக்கிறோம். ராஜித வந்ததும் அவரை பெரியவராக்கிக் கொண்டு தனித்து செயற்படுவதாக குறிப்பிட்டுள்ளார் அதற்கு பதிலளிக்காமல் ரணில் புறக்கணித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து இருக்கையில் இருந்து எழுந்த இருவர், உங்களிடம் தான் கூற முடியும். வேறு எவரிடமும் கூற முடியாது என்று சுட்டிக்காட்டியுள்ளனர். அதற்கு பதிலளித்த ரணில், கூச்சலிடாமல் தயவுசெய்து ஆசனத்தில் அமருங்கள் என்று கோபமாகக் கூறியுள்ளார்.

## தேசபந்துவின்...

மாத்தறை, வெலிகம பிரதேசத்திலுள்ள W-15 ஹோட்டல் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பில் தன்னை கைதுசெய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள உத்தரவை தடுத்து இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி தேசபந்து தென்னக்கோனினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தேசபந்து தென்னக்கோனினால் முன்வைக்கப்பட்டுள்ள மனுதொடர்பான விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் நீதியரசர் மொஹமட் லபார் தாஹீர் மற்றும் சரத் திசாநாயக்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தென்னக்கோன் சார்பாக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, மாத்தறை நீதவானின் கைது உத்தரவு சட்ட விதிகளுக்கு முரணாகவும் தனது தரப்பிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்யாமலும் பிறப்பிக்கப்பட்டதாக வாதிட்டுள்ளார். இருப்பினும், சட்ட மா அதிபர் சார்பாக முன்னிலையான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், வெலிகம ஹோட்டல் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின்னணியில் தேசபந்து தென்னக்கோனே செயற்பட்டிருந்ததாக நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார்.

மாத்தறை நீதவான் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய உண்மைகளை தென்னக்கோன் மறைத்ததை மேற்கோள்காட்டி, மனுவை நேரடியாக தள்ளுபடி செய்யுமாறு அவர் நீதிமன்றத்தை மேலும் வலியுறுத்தியுள்ளார். இதன்போது நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வாதப் பிரதிவாதங்களை ஆராய்ந்ததன் பின்னர் இந்த மனுமீதான தீர்ப்பை எதிர்வரும் 17ஆம் திகதி அறிவிப்பதாக நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

## மஹிந்த யாப்பா...

2023 மற்றும் 2024ஆம் ஆண்டு காலப்பகுதியில் பயன்படுத்திய வாகனங்கள் மற்றும் அதற்கான எரிபொருள் செலவுகள் தொடர்பில் பாராளுமன்ற நிதிப் பணிப்பாளர் அத்தாட்சிப்படுத்திய ஆவணங்களை சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க நேற்று சபைக்கு சமர்ப்பித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (13) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவற்றை சமர்ப்பித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றுகையில்,

''2023 – 2024ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் வாகனப் பயன்பாடு மற்றும் உத்தியோகபூர்வ இல்லத்துக்கான செலவுகளையும் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் வாகனங்கள் மற்றும் எரிபொருள் செலவு தொடர்பான விபரங்களையும் 2025.02.27ஆம் திகதி சபைக்கு சமர்ப்பித்தேன். இதனைத் தொடர்ந்து முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நான் குறிப்பிட்ட விடயங்கள் பொய்யானவை, அடிப்படையற்றவை என்று ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட்டார்.

பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வமான தகவல்களையே சபைக்கு சமர்ப்பித்தேன். இந்த விடயம் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு கணக்காய்வு மற்றும் நிதியியல் தொடர்பான தகவல்களை சபாநாயகர் அலுவலகத்திடம் கோரியிருந்தேன். மக்களின் வரிப்பணத்தின் செலவு தொடர்பில் சகல அரச நிறுவனங்களும் மேன்மை பொருந்திய பாராளுமன்றமும் நாட்டு மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும். ஏனைய அரச நிறுவனங்களைப் போன்று பாராளுமன்றத்தின் செலவுகளையும் கணக்காய்வு செய்வதற்கு சபாநாயகர் எடுத்துள்ள தீர்மானத்தை வரவேற்கிறோம்.

மக்கள் பிரதிநிதிகள், மக்களின் தகவலறியும் உரிமையை மறுக்க முடியாது. முன்னாள் சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவரின் வாகனங்கள், எரிபொருள் உட்பட செலவுகள் தொடர்பில் பாராளுமன்ற நிதிப் பணிப்பாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆவணத்தை சபைக்கு சமர்ப்பிக்கிறேன்.

2023 மற்றும் 2024ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அப்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் எரிபொருள் செலவு தொடர்பான அறிக்கையையும் 2024ஆம் ஆண்டு சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் மின்சாரம், நீர் உட்பட இதர பராமரிப்பு செலவுகள் தொடர்பான விபரங்களையும் தற்போதைய சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் ஆகியோரின் செலவுகளையும் சபைக்கு சமர்ப்பிக்கிறேன்.

நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உண்டு. ஏனைய அரச நிறுவனங்களை காட்டிலும் சபாநாயகர் உட்பட ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் வரிப்பணத்துக்கு பொறுப்புக்கூற வேண்டும்.முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 2023ஆம் ஆண்டு 08 அரச வாகனங்களை பயன்படுத்தியுள்ளார். அதற்காக 26 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதேபோல் 2024ஆம் ஆண்டு 09 மாத காலப்பகுதியில் 09 வாகனங்களை பயன்படுத்தியுள்ளார். அதற்காக 33 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அதேபோல், முன்னாள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ 2023ஆம் ஆண்டு 06 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார். அதற்கு 16 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு 06 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார். அதற்கு 13 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன் 2023ஆம் ஆண்டு 04 வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார். அதற்கு 7.8 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதேபோல், 2024ஆம் ஆண்டு 04 வாகனங்களை பயன்படுத்தியுள்ளார். இதற்கு 7.2 மில்லியன் ரூபா எரிபொருளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

இந்த விபரங்களை பாராளுமன்ற நிதிப் பணிப்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார். மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு முன்னுதாரணமாக செயற்பட வேண்டும். இந்த கணக்காய்வின் பிரகாரம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமானால் அது குறித்து சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும்'' என்றார்.

## கிழங்குக்கான...

தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை(12) இடம்பெற்ற 2025 வரவு - செலவுத் திட்டத்தின் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''நுவரெலியா மாவட்டம் தான் நாட்டில் 360 நாட்களும் மரக்கறி விவசாயம் செய்யும் பிரதேசமாக இருக்கிறது. எனவே அங்குள்ள விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய விவசாய அமைச்சர் அந்தப் பிரதேசத்துக்கும் விஜயம் செய்ய வேண்டும். குறிப்பாக கிழங்கு அறுவடையின்போது அரசாங்கம் கிழங்கு இறக்குமதி செய்கிறது. கடந்த அரசாங்கமும் இதனை செய்தது. தரகுப்பணத்துக்கே அவர்கள் அவ்வாறு செய்தார்கள்.

மலையகத்தில் விவசாய மண் மற்றும் இதர பரிசோதனைகளுக்கு விவசாயிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும். அது இடம்பெறுவதில்லை. எதிர்காலத்தில் இது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் ஒரு கிலோ கிழங்கு உற்பத்தி செய்ய 200 ரூபா செலவாகிறது. அப்படியானால், 250 ரூபாவுக்காவது விற்பனை செய்தாலே விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்கிறது. அதனால் அரசாங்கம் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் கிழங்கு இறக்குமதியை நிறுத்த வேண்டும். அல்லது இறக்குமதி வரியை அதிகரிக்க வேண்டும்.

நுவரெலியா மாவட்ட விவசாயிகளுக்கு மேலதிக வருமானமாக அவர்களுக்கு பொதுவான கால்நடை பண்ணை அமைத்து கொடுத்து அவர்களின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வழி ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அவ்வாறான ஏற்பாடுகள் எதுவும் இல்லாமல் இருப்பதாலே அந்த விவசாயிகள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அதேபோன்று, நுவரெலியா மாவட்டத்தில் பால் உற்பத்திக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்'' என்றார்.

## நளீம் எம்.பி...

முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கமைய, நாளை வெள்ளிக்கிழமை (14) பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றினை நிகழ்த்திவிட்டு குறித்த இராஜிநாமாவை மேற்கொள்ளவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டன.

கடந்த வருடம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு தேசியப் பட்டியல் ஆசனமொன்று கிடைக்கப் பெற்றது.

இதனை சுழற்சி முறையில் பகிர அக்கட்சியினால் தீர்மானிக்கப்பட்டது.

இந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நளீமுக்கு நிபந்தனைகளுடன் வழங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தீர்மானித்தார். இதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டு ஏறாவூர் நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதாக நளீம் கட்சிக்கு உறுதிமொழி வழங்கியிருந்தார்.

குறித்த உறுதிமொழியை நிறைவேற்றும் நோக்கிலேயே தற்போது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்ய அவர் தயாராகி வருகின்றார்.

எவ்வாறாயினும், ஏறாவூர் நகர சபைத் தேர்தல் நிறைவடைந்து புதிய தவிசாளரொருவர் நியமிக்கப்படும் வரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு எவரையும் நியமிப்பதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்மனுத் தாக்கல் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகி 20ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடையவுள்ளது.



# சம்பியன்களின் சம்பியன்!







ஐ.சி.சி. சம்பியன்ஸ் ட்ராபி இறுதிப் போட்டியில் நியூஸிலாந்து அணியை வீழ்த்தி 3ஆவது தடவையாக கிண்ணத்தை வென்றிருக்கிறது இந்திய அணி. இந்த வெற்றியின் மூலம் சம்பியன்ஸ் ட்ராபியை அதிக தடவை கைப்பற்றிய அணி என்ற பெருமையும் இந்திய அணிக்கு கிடைத்திருக்கிறது. சம்பியன்ஸ் ட்ராபி இறுதி ஆட்டத்துக்கு ஐந்து தடவைகள் தகுதி, 2013, 2017, 2025 எனத் தொடர்ந்து மூன்று தடவைகள் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி ஆகிய சாதனைகளும் இந்தியாவின் வசம் வந்துள்ளன.

ஐ.சி.சி. தரவரிசையில் முதல் எட்டு இடங்களில் மட்டுமுள்ள அணிகள் மட்டும் பங்கேற்கும் சம்பியன்ஸ் ட்ராபி 1998ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பங்களாதேஷில் நடைபெற்ற அறிமுகப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை வீழ்த்தி தென்னாபிரிக்க அணி சம்பியன் பட்டம் வென்றது. 2002இல் நடைபெற்ற போட்டியின் இறுதி ஆட்டத்தில் மழை குறுக்கிட்டு ஆட்டம் தடைப்பட்டதால் இந்திய – இலங்கை அணிகளுக்கு கிண்ணம் பகிர்ந்தளிக்கப்பட்டது. சம்பியன்ஸ் ட்ராபியை இரு தடவைகள் கைப்பற்றி இந்தியாவுக்கு அடுத்த இடத்தில் உள்ளது அவுஸ்திரேலியா.

2000 சம்பியன்ஸ் ட்ராபி இறுதி ஆட்டத்தில் இந்திய அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது நியூஸிலாந்து. இப்போது நடந்து முடிந்த இறுதி ஆட்டத்தில் நியூஸிலாந்தை வீழ்த்தியதன் மூலம் 2000ஆம் ஆண்டு தோல்விக்கு பதிலடி கொடுத்திருக்கிறது இந்திய அணி. 2000இல் நான்கு விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவை வென்றது நியூஸிலாந்து. 2025இல் அதே நான்கு விக்கெட் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை வென்றிருக்கிறது இந்தியா. 2000ஆம் ஆண்டு இறுதி ஆட்டத்தில் சௌரவ் கங்குலி 117 ஓட்டங்கள் குவித்ததும் நியூஸிலாந்தின் கிறிஸ் கெய்ன்ஸின் சதத்தால் இந்திய அணி தோல்வியைத் தழுவியதையும் கிரிக்கெட் ரசிகர்கள் மறந்திருக்க முடியாது.

2025 சம்பியன்ஸ் ட்ராபி முழுவதுமே இந்திய அணி ஆதிக்கம் செலுத்தியது. எந்தவோர் ஆட்டத்திலும் இந்திய அணிக்கு பெரியளவிலான நெருக்கடியை எதிரணிகளால் அளிக்க முடியவில்லை. குரூப்–ஏ பிரிவில் இடம்பெற்றிருந்த இந்தியா, லீக் சுற்று ஆட்டங்களில் நியூஸிலாந்து, பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகளை எளிதாக வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. அரையிறுதியில் பலம் வாய்ந்த அவுஸ்திரேலிய அணியை பதற்றம்கொள்ளாமல் எதிர்கொண்டு வென்றது. இறுதி ஆட்டத்தில் நியூஸிலாந்தின் தொடக்க துடுப்பாட்டக்காரர்கள் மட்டுமே இந்தியாவுக்கு சிறிய நெருக்கடியை அளிக்கும் வகையில் ஓட்டங்களைக் குவித்தனர்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர் இப்போதைய சம்பியன்ஸ் ட்ராபியில் இந்திய அணியின் கூட்டு முயற்சி வெளிப்படுத்தப்பட்டது. தனிப்பட்ட சாதனைகளாக அல்லாமல் அணியின் அனைத்து வீரர்களும் சிறந்த பங்களிப்பை வழங்கினர். கடந்த சில காலமாக சரியாக ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் திணறிய கேப்டன் ரோஹித் சர்மாவும் விராட் கோஹ்லியும் இந்தத் தொடரில் தங்களது திறமையை மீட்டெடுத்தனர். லீக் சுற்றில் பாகிஸ்தானுக்கு எதிரான முக்கியமான ஆட்டத்தில் சதம், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அரையிறுதியில் 84 ஓட்டங்கள் என கோஹ்லி, தன்னை ‘கிங் கோஹ்லி’ என்று நிரூபித்தார். இறுதி ஆட்டத்தில் நியூஸிலாந்துக்கு எதிராக 76 ஓட்டங்களைக் குவித்து ‘ஹிட் மேன்’ என்ற பட்டத்துக்கு நியாயம் சேர்த்தார் ரோஹித் சர்மா.

ஷுப்மன் கில், ஷ்ரேயஸ் ஐயர், கே.எல்.ராகுல், ஹர்திக் பாண்டியா ஆகியோரும் தங்களது பொறுப்பை உணர்ந்து ஆடினர். சில போட்டிகளில் டொப் ஓடர் திணறியபோது, மிடில் ஓடர் துடுப்பாட்டக்காரர்கள் கைகொடுத்தனர். குறிப்பாக, தொடர் முழுவதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஷ்ரேயஸ் ஐயரை ‘சைலன்ட் ஹீரோ’ எனப் புகழ்ந்தார் கப்டன் ரோஹித் சர்மா.

இறுதி ஆட்டத்தில் நியூஸிலாந்துக்கு எதிராக 48 ஓட்டங்கள் உட்பட இந்தத் தொடரில் ஐந்து ஆட்டங்களில் 241 ஓட்டங்களை எடுத்து அதிக ஓட்டங்களைக் குவித்தவர்களில் நியூஸிலாந்தின் ரச்சின் ரவீந்திராவுக்கு (263 ரன்கள்) அடுத்தபடியாக இரண்டாவது இடத்தைப் பிடித்தார் ஷ்ரேயஸ் ஐயர்.

சம்பியன்ஸ் ட்ராபி மூலம் எதிர்காலத்தில் இந்திய அணியின் முக்கியமான சுழற்பந்து வீச்சாளராக உருவெடுத்திருக்கிறார் தமிழகத்தின் வருண் சக்கரவர்த்தி. ‘மிஸ்ட்ரி ஸ்பின்னர்’ என அழைக்கப்படும் அவர், மூன்றே ஆட்டங்களில் 9 விக்கெட்டுகளை வீழ்த்தி, அதிக விக்கெட் வீழ்த்தியவர்களில் மிட்செல் சான்ட்னர், முஹமது சமி ஆகியோருடன் இணைந்து இரண்டாவது இடத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளார். இறுதி ஆட்டத்தில் வில் யங், கிளென் பிலிப்ஸ் ஆகிய இருவரின் முக்கியமான விக்கெட்டுகளை வீழ்த்தி திருப்புமுனையை ஏற்படுத்தினார் வருண். இத்தனைக்கும் இது அவரது முதலாவது ஐ.சி.சி. தொடர் என்பது குறிப்பிடத்தக்கது.

2025 சம்பியன்ஸ் ட்ராபியை பாகிஸ்தான் நடத்தியது. ஆனால், பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்ததால், இந்திய அணியின் ஆட்டங்கள் மட்டும் டுபாயில் நடைபெற்றன. இந்திய அணி பாகிஸ்தானுக்குச் செல்ல மறுத்தது தொடர்பாக விமர்சனங்களும் எழுந்தன. இந்திய அணி தனது அனைத்து ஆட்டங்களையும் டுபாயில் ஒரே மைதானத்தில் ஆடியது அந்த அணிக்கு அனுகூலமானமென அவுஸ்திரேலியாவின் பேட் கம்மின்ஸ் உள்ளிட்ட சில கிரிக்கெட் பிரபலங்கள் மற்றொரு விமர்சனத்தை முன்வைத்தனர். ஆனால், டுபாய் மைதானம் எங்களைப் போன்றே அனைவருக்கும் பொதுவானது. இந்த மைதானத்தால் எங்களுக்கு எந்த சாதகமும் இல்லையென இந்திய அணியின் பயிற்சியாளர் கௌதம் கம்பீர் பதிலளித்தார்.

2023 ஒருநாள் உலகக் கிண்ணம், 2024 ரி20 உலகக் கிண்ணம், இப்போது சம்பியன்ஸ் ட்ராபி எனத் தொடர்ந்து மூன்று ஐ.சி.சி. போட்டிகளில் தான் ஆடிய 24 ஆட்டங்களில் 23 ஐ வென்றுள்ளது இந்திய அணி. 2025 சாம்பியன்ஸ் ட்ரொபி வெற்றி மூலம் சாம்பியன்களின் சாம்பியன் எனவும் நிரூபித்திருக்கிறது.





தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 மார்ச் 13ஆம் திகதி, வியாழக்கிழமை

# பெண் மருத்துவருக்கு நீதி நிலைநாட்டப்படுமா?

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பெண் வைத்தியர் ஒருவரை தவறான நடத்தைக்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் நேற்றுக் காலை (12) கல்னேவ பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவரென அடையாளம் காணப்பட்டிருந்ததோடு, அவரைத் தேடுவதற்காக 5 விசேட பொலிஸ் குழுக்களும் நியமிக்கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை உடனடியாகக் கைதுசெய்ய வேண்டுமென்று தெரிவித்த போராட்டத்தில் ஈடுபட்ட வைத்தியர்கள், நாடு முழுவதும் 24 மணிநேர பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட 32 வயது தமிழ்ப் பெண் வைத்தியர் கடந்த திங்கட்கிழமை (10) மாலை தனது கடமைகளை முடித்துவிட்டு அரசால் வைத்தியர்களுக்கென வழங்கப்பட்ட அவரின் தங்குமிடத்துக்குச் சென்றுள்ளார். பின்னர் மாலை 6.30 மணி முதல் 7 மணி வரையான காலப்பகுதியில் அடையாளம் தெரியாத ஒருவர் அவரின் தங்குமிடத்துக்குள் சென்று, கத்தியைக் காட்டி மிரட்டி, பாலியல் வன்கொடுமை செய்தாரென்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பணி முடிந்து வைத்தியசாலை விடுதியில் வைத்தியர் தங்கியிருந்தாலும் அச்சமயத்தில் அவசர அழைப்புகள் வந்தால் மருத்துவ விடுதிக்குத் திரும்பி, தமது உயர்ந்த மருத்துவ சேவைகளை மக்களுக்கு - நோயாளர்களுக்கு - வழங்க வேண்டிய மருத்துவ சேவைக் கடப்பாடு மருத்துவர்களுக்கு உண்டு. அந்த வகையில் இந்தப் பெண் வைத்தியர் வைத்தியசாலையில் அன்றைய பணி நேரம் முடிந்து விடுதிக்குத் திரும்பியிருந்தார். எனினும், கடமைக்கு அழைக்கப்படக் கூடிய நேரத்திலேயே அவர் இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டிருக்கின்றார்.

அந்த வகையில் பார்த்தால் கடமை நேரத்தில் வைத்தியசாலை வளாகத்துக்குள் வைத்து இந்தக் கொடூரம் இளம் பெண் வைத்தியர் மீது புரியப்பட்டிருக்கின்றது.

இந்த விடயத்தை சாதாரண அல்லது இதர சம்பவங்களைப்போன்று கருதிவிட முடியாது. அத்தனை மருத்துவர்கள் அங்கு இருக்கும்போது இந்தப் பெண் மருத்துவர் மட்டும் எப்படி இலக்குவைக்கப்பட்டார் என்பது புரியவில்லை.அவர் தமிழ் என்பதாலா அப்படி இலக்குவைக்கப்பட்டார் என்று குறுகிய வட்டத்துக்குள் நின்று கேட்பதாக இருந்தாலும் இந்தச் சம்பவம் இடம்பெற்ற சூழல், இடம்பெற்ற விதம் அப்படித்தான் எண்ணத் தோன்றுகின்றது.

கூரிய ஆயுதத்துடன் வந்து மருத்துவர் விடுதிக்குள் அத்துமீறலில் ஈடுபட்ட ஒருவர் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டாரென்றால், பாதிக்கப்பட்ட மருத்துவர் தமிழர் தானே, இவர் என்ன செய்யப்போகிறார் என்ற அகங்காரம் ஒரு பக்கம் இருந்திருக்கும். அதேபோல், இராணுவச் சிப்பாயாக இருந்த நபர் என்பதால் கூறவே தேவையில்லை. மனிதத்தன்மையாவது மண்ணாங்கட்டியாவது என்ற கொரூர சிந்தனை மறுபக்கம் இருந்திருக்கும். இதுதான் நாட்டின் தமிழர்களின் நிலைமை.என்னதான் சந்தேக நபரைக் கைது செய்தாலும் - விசாரணை நடத்தினாலும் பாதிக்கப்பட்ட பெண் மருத்துவரின் மனநிலைமைக்கு மருந்தென்ன?

இங்கு பாதிக்கப்பட்டவர் தமிழ் மருத்துவர் என்பது மட்டுமல்ல பிரச்சினை.எந்த இனத்தின் எந்த ஒருவருக்கும் இப்படியான நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது. ஆனால், இப்படியான சம்பவங்களில் தமிழர்கள் மட்டும் எப்படி இலக்குவைக்கப்படுகிறார்கள் என்பதுதான் கேள்வி. இந்த வைத்தியசாலையில் பாதுகாப்பு கேள்விக்குறியாக இருந்திருக்கிறது. சுகாதார அமைச்சரே நேற்று அதனை பாராளுமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். அப்படியாக வைத்தியசாலை நிர்வாகம் பொறுப்பில்லாமல் நடக்குமாயின் அதற்கு பலிக்கடா ஆவது யார்? நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள இப்படியான இளவயது அறிவுஜீவிகளா?

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்த விடயத்தில் உடனடியாக அழுத்தத்தை வழங்கி சந்தேக நபரைக் கைதுசெய்யக் கோரிக்கை விடுக்கவில்லையேல் தேசபந்து, செவ்வந்தி வரிசையில் மேற்படி சம்பவத்தின் சந்தேக நபரும் தலைமறைவாகியிருக்கக்கூடும். சந்தேக நபரை இப்போது கைது செய்திருக்கும் பொலிஸ் நீதியான விசாரணைகளை நடத்தி இந்த அநியாயத்தைப் புரிந்த சந்தேக நபருக்கு கடும் தண்டனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.அந்தத் தண்டனை, இப்படியான செயல்களை இனி எவரும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதளவுக்கு இருக்க வேண்டும். அரசாங்கம் இதில் முக்கிய வகிபாகத்தை வகிக்க வேண்டும்.

## இன்றைய நாளில்...

- 1640 – காலி கோட்டை ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டது. கோஸ்ட்டர் இலங்கையின் டச்சு ஆளுநராக நியமிக்கப்பட்டார்.
- 1781 – வில்லியம் எர்செல் யுரேனஸ் கோளைக் கண்டுபிடித்தார்.
- 1930 – புளூட்டோ கண்டுபிடிக்கப்பட்ட செய்தி ஆர்வர்ட் கல்லூரி வான் காணகத்துக்கு தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டது.
- 1969 – அப்பல்லோ-9 விண்கலம் பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பியது.
- 1988 – உலகின் மிக நீளமான கடலடிச் சுரங்கமான செய்க்கான் சுரங்கம், ஜப்பானில் கட்டி முடிக்கப்பட்டது.
- 2003 – இத்தாலியில் 3,50,000 ஆண்டுகள் பழைமையான மனித அடிச்சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக ‘நேச்சர்’ இதழ் அறிவித்தது.

# உங்களின் சிறுநீரகங்கள் நலமாக உள்ளனவா?




World Kidney Day
13 MARCH 2025

உலக சிறுநீரக தினம் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதத்தின் இரண்டாவது வாரம் வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது. அதற்கமைய இந்த வருடத்துக்கான உலக சிறுநீரக தினம் 13 ஆம் திகதியான இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

சர்வதேச சிறுநீரகவியல் சமூகம் (ISN), சர்வதேச சிறுநீரக அறக்கட்டளைகளுக்கான கூட்டமைப்பு (IFK) ஆகியன இணைந்து இத்தினத்தை 2006 ஆம் ஆண்டு ஆரம்பித்தன. இந்தத் தினமானது சிறுநீரகங்களின் முக்கியத்தும் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் உலகளாவிய ரீதியில் சிறுநீரக நோய் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் தாக்கத்தைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் உலக சிறுநீரக தினத்துக்கான கருப்பொருள், ‘உங்களின் சிறுநீரகங்கள் நலமாக உள்ளனவா? – ஆரம்பத்திலேயே கண்டறிந்து , சிறுநீரக ஆரோக்கியத்தை பாதுகாக்கவும்’ என்பதாகும்.

இந்தத் தினத்தை முன்னிட்டு தேசிய சிறுநீரகவியல், ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரகமாற்று சிகிச்சைக்கான நிறுவனமானது விழிப்புணர்வு, கல்வி மற்றும் சமூக ஈடுபாடுகளை மேம்படுத்தக்கூடிய தொடர்ச்சியான நிகழ்வுகளை முன்னெடுத்து வருகிறது.



நீரிழிவு, சிறுநீரக நோய் தொடர்பிலும் மருத்துவ நிபுணர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் தேசிய சிறுநீரகவியல், ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரகமாற்று சிகிச்சைக்கான நிறுவனத்தின் பதில் ஆலோசகர் வைத்தியர் சச்சித் சி. விஜேசிறிவர்தன சிறுநீரக பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்துகிறார்.

**நீரிழிவு சிறுநீரக நோய் (Diabetic Kidney Disease) மற்றும் அதனை எவ்வாறு தடுப்பது?**

**நீரிழிவு நோயாளர்களுக்கு சிறுநீரக நோய் எந்தளவுக்கு பொதுவானதாக இருக்கிறது?**

நீரிழிவு நோயாளர்களில் 40 சதவீதமானவர்கள் அவர்களது வாழ்நாளில் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. நாட்பட்ட சிறுநீரக நோயின் காரணமாக உலகளாவிய ரீதியில் ஊடுபகுப்பு அல்லது சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்ய வேண்டிய தேவை அவசியமாக இக்கிறது. நாட்பட்ட சிறுநீரக நோய்க்கு, நீரிழிவு நோய் முக்கிய காரணமாக இருக்கின்றமை சுட்டிக்காட்டவேண்டிய விடயமாகும்.

***யாருக்கு எப்போது பரிசோதனை செய்ய வேண்டும்?***

ஒருவருக்கு நீரிழிவு நோய் (இன்சுலின் சார்ந்த நீரிழிவு நோய்) இருப்பதாக அடையாளம் கண்டு ஐந்து ஆண்டுகளின் பின்னர் பரிசோதனை செய்ய வேண்டும். நீரிழிவு நோய் கண்டறியப்பட்டவுடன் வருடந்தோறும் பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும்.

**நீரிழிவு சிறுநீரக நோய் (Diabetic Nephropathy) ஏன் ஏற்படுகிறது?**

இதில் பல காரணிகள் பங்களிக்கின்றன. ஆனால், இரத்தத்தில் சக்கரையின் அளவு அதிகமாக இருப்பதும் இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இது சிறுநீரக செல்களை (குளோமெருலி) சேதப்படுத்துவதுடன் உடலுக்குத் தேவையான புரதத்தை வடிகட்டி வெளியேற்றக் காரணமாகவும் அமைகிறது.

இரத்த அழுத்தத்தை மோசமாக நிர்வகிப்பதே சிறுநீரகம் விரைவாக மோசமடைவதற்கு இன்னுமொரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

***நீரிழிவு சிறுநீரக நோய் அல்லது நீரிழிவு நெஃப்ரோபதி நோயறிதலை எவ்வாறு உறுதிப்படுத்துவது?***

இதற்காக நாம் சிறுநீர் ஆல்பியூமின் கிரியேட்டினின் விகிதம் (U.ACR) மற்றும் சிறுநீரகத்தின் வழியாக வடிகட்டப்படும் புரதத்தின் அளவைப் பொறுத்து மைக்ரோ அல்பிமினுரியா (30-300mg/g) அல்லது மைக்ரோ அல்பியுமினுரியா (>300mg/g) என வகைப்படுத்துகிறோம்.

இந்தப் பரிசோதனைகள் 3 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் சிறுநீரகங்களின் அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளவும் முடியும்.

***நீரிழிவு நெஃப்ரோபதியின் தீவிரத்தை எவ்வாறு வகைப்படுத்துவது?***

சீரம் கிரியேட்டினின் மற்றும் eGFR (மதிப்பிடப்பட்ட குளோமருலர் வடிகட்டுதல் வீதம்) ஆகியவற்றுக்கான இரத்தப் பரிசோதனைகளைச் செய்து அவற்றை மதிப்பிடுதல் வேண்டும். அந்த மதிப்பீடுகளைப் பொறுத்து நோய் நிலைமையின் ஆபத்தை வைத்தியரினூடாக அறிந்து கொள்ள முடியும்.

KDIGO (சிறுநீரக நோய் உலகளாவிய விளைவுகளை மேம்படுத்துதல்) வகைப்பாடும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வகைப்பாடும் காணப்படுகிறது. நாட்பட்ட சிறுநீரக நோய் நிலைமையில் 5 கட்டங்கள் உள்ளன. ஐந்தாம் கட்ட நோய் நிலைமையை அடையும்போது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்வது அவசியமாக இருக்கிறது.

**நோய் அறிகுறிகளும் எச்சரிக்கை அறிகுறிகளும்**

இந்த நோய் நிலைமை இறுதிக் கட்டத்தை அடையும் வரை முற்றிலும் அறிகுறி தென்படாமை மோசமான விடயமாகும். அதன் காரணமாகவே தொடர்ச்சியாக சிறுநீரக நோய்க்கான பரிசோதனையை மேற்கொண்டு உங்கள் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகிறது. எனவே, ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒருமுறை நீரிழிவு மற்றும் சிக்கல்கள் உள்ள நோயாளிகள் அடிக்கடி மதிப்பாய்வுகள் மற்றும் இரத்தம்/சிறுநீர் பரிசோதனைக்காக தங்கள் மருத்துவரைச் சந்திப்பது அவசியமாகும்.

நோய் நிலைமை இறுதிக் கட்டத்தை அடையும்போது பசியின்மை, சோம்பல், குமட்டல் மற்றும் தசைப்பிடிப்பு ஆகிய நோய் அறிகுறிகள் தென்படும்.

கால்கள் மற்றும் கண்களைச் சுற்றி வீக்கம் ஏற்படும். தோல்களில் கருமையும் வறட்சியும் ஏற்படலாம்.



***நீரிழிவு சிறுநீரக நோய்க்கான ஆபத்துக் காரணிகள்***

சில ஆபத்துக் காரணிகளைக் குறிப்பிட்டுக் கூறலாம். முதுமை, பெண் பாலினம், குறைந்த சமூக-பொருளாதார நிலை, உடல் பருமன், புகைப்பிடித்தல், நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதில் குறைபாடு என்பன இந்த நோயை ஏற்படுத்தும் காரணிகளாக செயற்படுகின்றன.

**நீரிழிவு சிறுநீரக நோயை நிர்வகிப்பதில் ஏற்படும் பொதுவான தடைகள்**

நீரிழிவு நோயில் சிறுநீரக நோய் குறித்த விழிப்புணர்வு இல்லாதது மற்றும் நோய் கடுமையாகும் வரை பெரும்பாலான நோயாளிகள் அறிகுறியற்றவர்களாக இருக்கின்றமை இதிலுள்ள ஒரு சிக்கல் நிலைமையாகும்.

சிகிச்சையின் சிக்கலான தன்மை மற்றும் அவற்றைக் கடைப்பிடிக்கும்போது ஏற்படும் சிரமங்கள், குறைந்த விழிப்புணர்வு மற்றும் அங்கீகாரம் என்பவற்றில் காணப்படும் வழிகாட்டுதல் அடிப்படையிலான முகாமைத்துவம் பொதுவாக சிகிச்சை செயல்முறைக்கு தடங்கலை ஏற்படுத்துகிறது.

***நீரிழிவு சிறுநீரக (Diabetic Nephropathy) நோயை எவ்வாறு தடுப்பது?***

இரத்த சர்க்கரையை கட்டுப்படுத்துவதே எளிய செயன்முறையாகும். வாழ்க்கை முறை மாற்றங்கள் சிகிச்சையின் முக்கிய எடுகோளாக இருக்கிறது. உடற்பயிற்சி செய்தல், நீரிழிவு உணவு முறையை கடைப்பிடித்தல், உடல் எடையைக் கட்டுப்படுத்துதல் மற்றும் புகைபிடிப்பதை நிறுத்துதல் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வழிநடத்துதல் அவசியமாகும். இந்த விடயங்களை நடைமுறைக்கு கொண்டுவருவது அவசியமாகும்.

மேலே உள்ள முறைகள் உங்கள் இரத்த சர்க்கரையை கட்டுப்படுத்த உதவும் என்பதுடன் சர்க்கரையின் அளவு மிக அதிகமாக இருந்தால் அதை இயல்பு நிலைக்குக் கொண்டுவர மருந்துகளை உட்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

100mg/dl க்கும் குறைவான இரத்த சர்க்கரை மற்றும் 7% க்கும் குறைவான HbA1c அளவு (6.5வீதத்துக்கும் குறைவானது) பராமரிக்க இந்த செயற்பாடுகள் அவசியமாக இருக்கும்.

***நீரிழிவு சிறுநீரக நோயில் மெட்ஃபோர்மின் (Metformin)பாதுகாப்பானதா?***

நீரிழிவு சிறுநீரக நோயின் ஆரம்ப கட்டங்களில் இது முற்றிலும் பாதுகாப்பானது. சிறுநீரக செயற்பாடு குறிப்பிடத்தக்க அளவில் பலவீனமடையும் போது மட்டுமே சிகிச்சையளிக்கும் மருத்துவரால் நிறுத்தப்பட வேண்டும். நீரிழிவு நோய்க்கு சிகிச்சையளிப்பதில் இது மிகவும் முக்கியமானது.சிகிச்சை அளிக்கும் மருத்துவர் அதை நிறுத்துவது அவசியம் என்று கருதும் வரை தொடர வேண்டிய ஒரு முக்கிய மருந்தாகும். வழிகாட்டுதல்கள் அல்லது நோயாளியின் காரணிகளின்படி, நீரிழிவு நோயாளிகளில் பெரும்பாலான நேரங்களில் அதன் நன்மைகள் அபாயங்களை விட அதிகமாக இருப்பதால், மெட்ஃபோர்மினை நீங்களே நிறுத்த வேண்டாம். வீக்கம், குமட்டல் அல்லது வாந்தி போன்ற பக்க விளைவுகள் இருந்தால் உங்கள் மருத்துவரை அணுகி பின்னர் நிறுத்த வேண்டியது அவசியமாகும்.

***நீரிழிவு சிறுநீரக நோய்க்கு சிகிச்சையளிக்க உதவும் புதிய மருந்துகள் யாவை?***

எம்பாக்ளிஃப்ளோசின் மற்றும் டபாக்ளிஃப்ளோசின் போன்ற SGLT2 தடுப்பான்கள் (சோடியம்-குளுக்கோஸ் இணை-டிரான்ஸ்போர்ட்டர் 2) ஒப்பீட்டளவில் புதிய மருந்துகள் மற்றும் இப்போது இலங்கையில் இலவசமாகக் கிடைக்கின்றன. நீரிழிவு சிறுநீரக நோயைத் தடுக்க சிறந்த முடிவுகளை வழங்க இந்த மருந்துகள் மெட்ஃபோர்மினுக்குப் பிறகு அல்லது அதனுடன் இணைந்து தொடங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

GLP1 (குளுகோகன் போன்ற பெப்டைட்-1) அகோனிஸ்ட்கள் என்பது தனியார் துறையிலும் ஊசி அல்லது வாய்வழி மருந்துகளாகக் கிடைக்கக்கூடிய ஒரு புதிய வகை மருந்துகளாகும். அவை நீரிழிவு சிறுநீரக நோய்க்கு சிகிச்சையளிப்பதில் நன்மை பயக்கும். எக்ஸெனடைடு மற்றும் செமக்ளூடைட் ஆகியவை புதிதாக அறியப்பட்ட மருந்துகள்.

***நீரிழிவு நோயாளிகள் நீரிழிவு சிறுநீரக நோய்க்கு முன்னேறுவதைத் தடுக்க என்ன செய்வது?***

குறைந்தபட்சம் ஒவ்வொரு 3 முதல் 6 மாதங்களுக்கும் மருத்துவர்/மருத்துவமனைக்குச் சென்று, நோய் செயல்முறை மற்றும் முன்னேற்றத்தைக் கண்காணிக்க மருந்துகள் மற்றும் பரிசோதனைகளை மதிப்பாய்வு செய்வதை ஒரு பழக்கமாக்கிகொள்ள வேண்டும்.

நோயாளர்கள் தாமாகவே மருந்துகளை எடுத்துக்கொள்வது அல்லது பழைய மருந்துச்சீட்டுகளுடன் மருந்தகத்தில் இருந்து மருந்துகளை எடுத்துக்கொள்வதை தவிர்த்துகொள்ள வேண்டும்.

தேவையானளவு உணவு உண்ணுதல், போதுமான உறக்கம், சுறுசுறுப்பாக செயற்படுதல் மற்றும் உணவை சமநிலையாகவும் இலேசாகவும் வைத்திருப்பது அவசியமாகும்.

புகைபிடித்தலை உடனடியாக நிறுத்தவேண்டும். 130/80 க்குக் கீழே இருக்க வேண்டிய உங்கள் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும் (உங்கள் உப்பைக் கட்டுப்படுத்துங்கள்) உங்கள் கொழுப்பைக் கட்டுக்குள் வைத்திருங்கள், குறிப்பாக, உங்கள் LDL மற்றும் ட்ரைகிளிசரைடுகள் மது அருந்துவதைத் தவிர்ப்பது அவசியமாகும்.

**வைத்தியர் சச்சித் சி. விஜேசிறிவர்தன**
மருத்துவ ஆலோசகர் (பதில்) தேசிய சிறுநீரகவியல், ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரகமாற்று சிகிச்சைக்கான நிறுவனம் நிறுவனம், மாளிகாவத்தை, கொழும்பு -10



## தவக்கால சிந்தனை

### மக்களுக்கு ஓர் உடன்படிக்கையாக உன்னை ஏற்படுத்தினேன்



நான் உம்மைப் பாது காத்து மக்களுக்கு ஓர் உடன் படிக்கையாக ஏற்படுத் தினேன். சிறைப்பட்டோரிடம் ‘புறப்படுங்கள்’ என்றும் இருளில் இருப்போரிடம் ‘வெளிப்படுங்கள்’ என்றும் சொல்வீர்கள். பாதையில் அவர்களுக்கு மேய்ச்சல் கிடைக்கும். வறண்ட குன்றுகள் அனைத்திலும் பசும் புல்வெளிகளைக் காண்பர். அவர்கள் பசியடையார்; தாகமுறார்; வெப்பக் காற்றோ வெயிலோ அவர்களை வாட்டுவதில்லை.

ஏனெனில், அவர்கள் மேல் கருணைகாட்டுபவர் அவர்களை நடத்திச் செல்வார். அவர் அவர்களை நீரூற்றுகள் அருகே வழிநடத்துவார் என் மலைகள் அனைத்தையும் வழியாக அமைப்பேன். என் நெடுஞ்சாலைகள் உயர்த்தப்படும்.


இதோ! இவர்கள் தொலைவிலிருந்து வருவார்கள். சிலர் வடக்கிலிருந்தும் சிலர் மேற்கிலிருந்தும் சிலர் சீனிம் நாட்டிலிருந்தும் வருவார்கள். வானங்களே, மகிழ்ந்து பாடுங்கள். மண்ணுலகே, களிகூரு. மலைகளே, அக்களித்து ஆர்ப்பரியுங்கள். ஆண்டவர் தம் மக்களுக்கு ஆறுதல் அளித்துள்ளார். சிறுமையுற்ற தம் மக்கள் மீது இரக்கம் காட்டியுள்ளார்.

சீயோனோ, ‘ஆண்டவர் என்னைக் கை நெகிழ்ந்துவிட்டார். என் தலைவர் என்னை மறந்துவிட்டார்’ என்கிறான. பால்குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும், நான் உன்னை மறக்கவே மாட்டேன்.

## நக்கல் நமசிவாயம்

தேசபந்து பொலிஸ் டிப்பார்ட்மெண்ட் மேல ரொம்ப அக்கறையுள்ளவரா இருக்கலாம்...

அதனால் தான் தன்னை எப்பிடி தேடி கண்டுபிடிக்கி றாங்கன்னு பார்க்க தனது டிப்பார்ட் மெண்ட் டுக்கு டாஸ்க் கொடுத்தி ருக்கக் கூடும்...



## தினசரி பலாபலன்கள்

**குரோதி வருடம் மாசி மாதம் 29ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்:** அரச உயர் அதிகாரிகளை வீணே பகைத்துக் கொள்ளாதீர்கள். ஆழம் அறியாது காலை விடாதீர்கள்.

**ரிஷபம்:** உண்மையான உறவு என்ன என்பதை கற்றுக் கொள்ளப்போகின்றீர்கள்.முயற்சிகள் எடுத்தாலும் தடைகள் உண்டு.

**மிதுனம்:** மற்றவர்கள் முடியாது என்று கைவிட்ட செயலை இலகுவில் முடித்துக் காட்டுவீர்கள்.நண்பர்கள் உதவுவார்கள்.

**கடகம்:** குடும்பத்துக்கான செலவுகளை இன்று நீங்கள் பொறுப்பேற்பீர்கள்.குதர்க்க வாத விவாதங்களை தவிருங்கள்.

**சிம்மம்:** உங்கள் உடல் இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். புகழ் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கன்னி:** கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். உணவு, உறக்கம் தடைப்படும் நாள்.

**துலாம்:** அரசாங்க வகையில் பல சலுகைகள் நீங்கள் கேட்காமலேயே கிடைக்கும். மூத்தவர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள்.

**விருச்சிகம்:** தொழில்-வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள்.நீங்கள் விரும்பிய தொழில் மாற்றம் அமையும்.

**தனுசு:** ஆலய தரிசனத்தால் மன நிறைவு அடைவீர்கள். தான தர்மங்களால் புண்ணியம் சேர்ப்பீர்கள்.

**மகரம்:** கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள், மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதியாக இருங்கள்.

**கும்பம்:** எதிர்பாராத வகையில் உங்கள் புகழ், அந்தஸ்து உயரப்போகின்றது.அரச வகையில் இலாபம் உண்டு.

**மீனம்:** கலங்கிப்போயிருந்த மனம் ஆறுதல் அடையப் போகின்றது.இன்றைய நாள் உங்களுடையது நல்லதையே நினையுங்கள்.

| | |
|---|---|
| **திதி:** | சதுர்தசி மு.ப.10.36 வரை பின் பௌர்ணமி |
| **நட்சத்திரம்:** | பூரம் மு.ப.6.19 வரை பின் உத்திரம் |
| **பிறை:** | வளர்பிறை |
| **யோகம்:** | மரண யோகம் மு.ப.6.19 வரை பின் அமிர்த யோகம் |
| **வார சூலை:** | தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| **நல்ல நேரம்:** | காலை- 9.18 – 12.18 மணி வரை மாலை- 4.18 – 6.18 மணி வரை |
| **ராகு காலம்:** | 1.48 – 3.18 மணி வரை |
| **எமகண்டம் :** | 6.18 - 7.48 மணி வரை |
| **வரைகுளிகை :** | 9.18 - 10.48 மணி வரை |
| **சந்திராஷ்டமம்:** | மகர ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

இன்று முற்பகல் 6.19 மணி வரை அஸ்வினி, கார்த்திகை,ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம்,உத்திரம்,அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம்,உத்திராடம், திருவோணம்,சதயம்,உத்திரட்டாதி

இன்று முற்பகல் 6.19 மணிக்கு மேல் பரணி, ரோஹிணி, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம்,அஸ்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

***விஷேட தினம் :*** பௌர்ணமி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைக்க நீதியமைச்சின் செயலாளர் தலைமையில் துறைசார் நிபுணர் குழு

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவிப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான சட்டமூலம் வெகுவிரைவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். அதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்கு நீதியமைச்சின் செயலாளர் தலைமையில் துறைசார் நிபுணர் குழு நியமிக்கப்படும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (12) உரையாற்றுகையில், இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க (தற்காலிகம்) பயங்கரவாத தடைச்சட்டம் அப்போதைய நிலைமைக்கு முகங்கொடுக்கும் வகையில் அதாவது பயங்கரவாத செயற்பாடுகளை தடுத்தல், ஏதேனும் அமைப்பு அல்லது நபர் இலங்கைக்குள்ளும் வெளியிலும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதை தடுக்கும் நோக்கில் இந்த சட்டம் இயற்றப்பட்டது.

இந்த சட்டம் பல்வேறு திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு 46 ஆண்டுகாலமாக இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய 1988 ஆம் ஆண்டு 22ஆம் இலக்க சட்டம், 2022 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க சட்டம் ஆகியவற்றின் ஊடாக மனித உரிமைகள் மற்றும் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மற்றும் பொது கோட்பாட்டுக் கொள்கைகள் முதன்மை சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்தம் செய்வதற்கு கடந்த அரசாங்கங்களும் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. இதற்கமைய கடந்த அரசாங்கம் 2023.09.15ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஊடாக திருத்தச் சட்டமூலத்தை பிரசுரித்திருந்தது. இந்த சட்டமூலத்துக்கு எதிராக சிவில் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்காக உயர்நீதிமன்றம் பல அறிவுறுத்தல்களை முன்வைத்துள்ளது. நீதிமன்றம் முன்வைத்துள்ள அறிவுறுத்தல்கள் கடந்த பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வை குழுவில் இரண்டு நாட்கள் ஆராயப்பட்டுள்ளது.

சட்டமூலத்தை மேலும் பரிசீலனை செய்து பரிந்துரைகளை முன்வைக்கும் பொருட்டு நீதியமைச்சின் செயலாளர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை பத்திரம் ஒன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளேன். குழுவின் பரிந்துரைகள் கிடைத்தவுடன், பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்யவோ அல்லது மாற்று நடவடிக்கைகளை முன்னெடுக்கவோ தீர்மானிக்கப்பட்டுள்ளது.



2022 ஆம் ஆண்டு 22ஆம் இலக்க பயங்கரவாத தடுப்பு (தற்காலிக விசேட ஏற்பாடுகள்) திருத்தச் சட்டத்தில் கைதுசெய்யப்படும் சந்தேகநபரை 72 மணித்தியாலங்கள் தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்கான ஏற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு முன்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்படும் சந்தேக நபரை வேண்டிய காலம் வரை தடுத்து வைப்பதற்கான இயலுமை காணப்பட்டது. இதனால் ஏற்படும் மனித உரிமை மீறல்கள் 2022ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க விசேட ஏற்பாடுகள் திருத்தச் சட்டத்தில் தடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக்கு நான் சமர்ப்பித்த பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது. இதற்கமைவாக நீதியமைச்சின் செயலாளர் தலைமையில் துறைசார் நிபுணர் குழுவை நியமிப்பதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

துறைசார் குழு முன்வைக்கும் பரிந்துரைகளை மீளாய்வு செய்து, பயங்கரவாத தடைச்சட்டத்தை பரிசீலனை செய்து, அதற்கு பதிலாக புதிய சட்டமூலம் வெகுவிரைவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என்றார்.

# மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை அரசு வெளியேற்ற வேண்டும்

## ஸ்ரீநேசன் எம்.பி. வலியுறுத்து



இன நல்லிணக்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ளவர்கள் தொடர்பான நீதிமன்றத்தின் தீர்ப்பை அரசு செயற்படுத்த வேண்டும். அங்கு குடியேறியவர்களை வெளியேற்ற வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. ஞானமுத்து ஸ்ரீநேசன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (12) உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

முந்தெனியாற்று கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, இன்றுவரை பூரணபடுத்தப்படவில்லை. வெளிநாட்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்த கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த திட்டம் கைவிட்டுப் போகுமா என்ற சந்தேகம் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட விவசாயிகளின் மத்தியில் ஏற்பட்டுள்ளது

உறுகாமம் - கித்துள் ஆகிய பகுதிகளை இணைத்து முந்தெனியாற்று திட்டத்தை அமுல்படுத்துவதால் 12 சிறுகுளங்களுக்கும் 25000 ஹெக்டயார் விவசாய நிலங்களுக்கும் நீரை விநியோகிக்க முடியும்.அதேபோல் மட்டக்களப்பு அம்பாறை ஆகிய மாவட்டங்களில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும். அத்துடன் கரடியனாறு விதை உற்பத்தி மையத்துக்கும் நீரை விநியோகிக்க முடியும். இதுவரை காலமும் வலதுசாரி கொள்கை உடையவர்கள் ஆட்சியில் இருந்தார்கள். தற்போது இடதுசாரி கொள்கையுடையவர்கள் ஆட்சிக்கு வந்துள்ளார்கள். ஆகவே சமத்துவ அடிப்படையில் அபிவிருத்திகள் பகிரப்பட வேண்டும்.

அத்துடன் மட்டக்களப்பு, மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரையில் எமது மக்கள் பல தசாப்தகாலமாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். அண்மைக்காலமாக அந்த பகுதியில் வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்கள் சட்டவிரோதமான முறையில் குடியமர்த்தப்பட்டார்கள்.மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமான முறையில் குடியமர்த்தப்பட்டவர்களை உடனடியாக வெளியேற்றுமாறும் இந்த சட்டவிரோத செயற்பாடுகள் இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.இருப்பினும் நீதிமன்றத்தின் தீர்ப்பு செயற்படுத்தப்படவில்லை.

எனவே இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் மாதவனை மேய்ச்சல் தரையில் சட்டவிரோதமான முறையில் குடியேறியுள்ளவர்கள் தொடர்பான நீதிமன்றத்தின் தீர்ப்பை அரசு செயற்படுத்த வேண்டும். அங்கு குடியேறியவர்களை வெளியேற்ற வேண்டும் என்றார்.

## ரமழான் நிகழ்வுக் குறிப்பேடு

- ஹிராக் குகையில் நபியவர்களுக்கு அல்குர்ஆன் இறக்கப்படுதல். நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் மனைவி இஸ்லாத்தை ஏற்றல்.
- நுபுவ்வத் 10: நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை அபூதாலியின் மரணம்.
- நுபுவ்வத் 10: ரமழான் மாதம் 10ஆம் நாள் அன்னை கதீஜா (ரலி) அவர்கள் மரணித்தல். அது துக்க ஆண்டாக (ஆமுல் ஹுஸ்ன்) பிரகடனம். ஜிஹாத் பற்றிய இறைகட்டளை இறங்குதல்.
- ஹிஜ்ரி 02: ரமழான் 17இன் பத்ர் யுத்தம், ஸதகத்துல் பித்ர் கடமையாக்கப்பட்டது.
- ஹிஜ்ரி 08: ரமழான் 21இல் மக்கா வெற்றி.
- ஹிஜ்ரி 09: தபூக் யுத்தம் மற்றும் ‘ஸகீப்’ தூதுக்குழுவினர் இஸ்லாத்தை ஏற்றல்.
- ஹிஜ்ரி 10: நபி (ஸல்) அவர்கள் அலி (ரலி) தலைமையில் ஒரு சிறிய படையினரை யெமன் தேசத்துக்கு அனுப்புதல்.
- ஹிஜ்ரி 11: நபி (ஸல்) அவர்களின் மகள் பாத்திமா (ரலி) அவர்கள் மரணித்தல்.
- ஹிஜ்ரி 40: ரமழான் 17இல் அலி (ரலி) அவர்கள் அப்துல் ரஹ்மான் பின் முல்ஜிம் என்ற காரிஜியால் குத்திக் கொலைசெய்யப்படல்.
- ஹிஜ்ரி 53: அரபிஹால் ரவுடன் தீவு வெற்றிகொள்ளப்படல்.
- ஹிஜ்ரி 57: நபி (ஸல்) அவர்களின் மனைவியும் அபூபக்கர் (ரலி) அவர்களின் மகளுமான ஆயிஷா (ரலி) அவர்களின் மரணம்.
- ஹிஜ்ரி 91: ஸ்பெயின் தெற்குக் கரையோரமாக இறங்கிய முஸ்லிம்களில் படை தெற்குப் பக்க கணவாய்கள் கைப்பற்றல்.
- ஹிஜ்ரி 92: ஸ்பெயினூடாக கடும் சமரில் முஸ்லிம் தளபதி தலிக் பின் ஸியாத் ரொட்ரிக் மன்னனை வெற்றிகொள்ளல்.
- ஹிஜ்ரி 114: கோல் பள்ளத்தாக்கில் அப்துல் ரஹ்மான் அல் ஆபிகி தலைமையில் நடந்த பிலாதுஷ் ஷுஹதால் போரில் முஸ்லிம்கள் தோல்வியடைதல். இதைத் தொடர்ந்து ஐரோப்பாவை நோக்கிய இஸ்லாத்தின் பரம்பலில் பின்னடைவு.
- ஹிஜ்ரி 361: கெய்ரோ அல் ஜாமி உல் அஸ்ஹரில் வணக்க வழிபாடு மற்றும் கல்வி என்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் பூர்த்தியாதல்.
- ஹிஜ்ரி 574: சிலுவை வீரர்கள் ஆக்கிரமித்திருந்த முஸ்லிம் உலகின் பெரும்பாலான பகுதிகளை ஸலாஹுத்தீன் அய்யூபி பாரிய வெற்றியில் மீட்டெடுத்தல்.
- ஹிஜ்ரி 657: ஐன் தாலூத் பகுதியில் வைத்து குத்ஸ் மன்னர் தலைமையிலான சிற்றரசர்களின் படைகளால் தாத்தாரியர்கள் தோற்கடிக்கப்படல்.

**கலாபூஷணம்**
**கல்லொளுவை பாரிஸ்**

# மன்னார் மாவட்டத்தில் ஐந்து சபைகளுக்கும் கட்டுப்பணத்தை செலுத்தியது தமிழரசுக் கட்சி

**(ஜோசப் நயன்)**

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட இலங்கை தமிழரசுக்கட்சி நேற்று (12) மதியம் மன்னார் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தலைமையிலான குழுவினர் இவ்வாறு கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.



மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை,மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணமே செலுத்தப்பட்டுள்ளது.

# மேய்ச்சல் தரை பிரச்சினைக்கான தீர்வை தற்போதைய அரசாங்கம் வழங்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கோரிக்கை



கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை இல்லாமையினால் வன்னி மாவட்டத்தில் விவசாயிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகுவதாகவும் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (12) உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது செல்வம் எம்.பி. மேலும் கூறுகையில், மேய்ச்சல் தரை இல்லாமையினால் கால்நடை பண்ணையாளர்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர். பல மைல்களுக்கு கால்நடைகளை அழைத்துச் சென்று ஒரு இடத்தில் இருந்து அவற்றை பார்த்துக்கொள்ளும் நிலைமை உருவாகியுள்ளது. கடந்த அரசாங்கங்கள் மேய்ச்சல் தரை தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காத நிலையில், புதிய அரசாங்கம் அந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை வனஜீவராசிகள் மற்றும் வன திணைக்களங்கள் அரசாங்கத்துக்கு கீழேயே வருகின்றன. இந்த திணைக்களங்களும் நிலங்களை விடுவிப்பதாக கூறினாலும் அதனை செய்வதில்லை. அவர்களுக்கென தனியான சட்டங்கள் இருக்கின்றனவா என்று தெரிய வில்லை. விவசாயிகளின் நிலமாக இருந்தாலும் சரி, மேய்ச்சல் தரையாக இருந்தாலும் சரி அவை அந்த திணைக்களங்களின் கீழேயே உள்ளன.

அத்துடன் விவசாய நிலங்கள் பல இராணுவம் உள்ளிட்ட முப்படையினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. அவர்கள் அதில் விவசாயம் செய்கின்றனர். இந்தக் காணிகளை விவசாயிகளிடம் ஒப்படைத்தால் நெல்லுக்கான பஞ்சம் இல்லாமல் போகும் என்று கூறலாம்.

இங்குள்ள விவசாயிகள் வசதியானவர்கள் அல்ல. கால்நடைகளை விற்பனை செய்தல் மற்றும் பெண்களின் தாலிக்கொடிகளை அடகு வைப்பதில் ஈடுபடுகின்றனர். இவர்கள் பொருளாதா பிரச்சினையில் சொல்லொணா துன்பங்களை அனுபவிக்கின்றனர். இவற்றை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.





***நீங்கள் குர்ஆனை ஓதுங்கள் நிச்சயமாக அது நாளை மறுமையில் அதை ஓதியவருக்கு பரிந்துரை செய்யும் என நபி (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.***

***(புகாரி,முஸ்லிம்)***

***மேலும் குர்ஆனை உரிய முறையில் ஓதி அதன்படி செயற்பட்டவர் நாளை மறுமையில் சங்கைக்குரிய உயர்ந்த மலக்குகளுடன் இருப்பார். கஷ்டப்பட்டு திக்கித்திக்கி ஓதுபவருக்கு இரண்டு மடங்கு கூலி கிடைக்கும் என நபி (ஸல்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.***

***ரமழான் அல் குர்ஆன் அருளப்பட்ட மாதம். அதனால்தான் அதற்கு ஏனைய மாதங்களைவிட சிறப்புகள் இருக்கின்றன. எனவே நாமும் அல்குர்ஆனை அதிகம் ஓதி அதன் சிறப்புகளை அடைந்துகொள்வோம்.***

(தொழுகை நேரங்கள்)
(10ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை)

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 5.04 |
| சூரிய உதயம் | - | 6.20 |
| ழுஹர் | - | 12.22 |
| அஸர் | - | 3.38 |
| மஃரிப் | - | 6.22 |
| இஷா | - | 7.32 |

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**நாணய மாற்று விதம் (12.03.2025)**

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 181.3365 | 190.5978 |
| கனேடியன் டொலர் | 200.3468 | 208.8368 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.4777 | 42.0538 |
| யூரோ | 315.6044 | 328.5463 |
| ஜப்பான் யென் | 1.9571 | 2.0342 |
| சிங்கப்பூர் டொலர் | 216.9322 | 226.8588 |
| ஸ்ரேலிங் பவுன் | 375.1284 | 389.2797 |
| சுவிஸ் பிரான்ங் | 326.6546 | 342.1904 |
| ஐ.அ. டொலர் | 291.2556 | 299.7977 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 784.0417 |
| குவைட் | குவைட் தினார் | 959.1087 |
| ஓமான் | ஓமான் றியால் | 767.4763 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.0703 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.7941 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.4578 |

## பிளவுபட்டது தமிழரசுக் கட்சி

**பு.கஜிந்தன்**

இலங்கை தமிழரசுக் கட்சியில் இதுவரை இணைந்து அரசியலில் பயணித்த முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் தலைமையிலான அணி இம்முறை தமிழ் மக்கள் கூட்டணியின் சின்னமான மான் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பாலச்சந்திரன் மேலும் தெரிவிக்கையில்

இதுவரை காலமும் தமக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் காரைநகரின் அபிவிருத்திக்காக தம்முடன் கைகோப்பார்கள் என தான் பலமாகநம்புவதாகவும், பிரதேச சபையின் இறுதி 7 மாதங்கள் தான் தவிசாளராக இருந்து பல அதிரடி அபிவிருத்திகளை இனங்கண்டு செயற்படுத்தியமையை தம்மக்கள் மறக்கமாட்டார்கள் என தாம் திடமாக நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்களை தாம் பலமாக நம்புவதோடு அவரது கட்சியினரின் சட்டப்புலமையை பயன்படுத்தி எதிர்கால காரைநகரின் நிலையான அபிவிருத்திக்கு முறையான திட்டங்களை வகுத்து செயற்படுத்த எண்ணியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை - வியட்நாம் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத் தலைவராக அமைச்சர் தம்மிக பட்டபெந்தி தெரிவு



பத்தாவது பாராளுமன்றத்துக்கான இலங்கை - வியட்நாம் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத் தலைவராக சுற்றாடல் அமைச்சர் (வைத்தியர்) தம்மிக பட்டபெந்தி தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை - வியட்நாம் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டம் நேற்று முன்தினம் (11) சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்றத்தில் நடைபெற்றபோதே இத்தெரிவு இடம்பெற்றது.

இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ட்ரின் தி டாம் (Trinh Thi Tam) இதில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அத்துடன், இலங்கை - வியட்நாம் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளராக பாராளுமன்ற உறுப்பினர் (சட்டத்தரணி) ஹசாரா லியனகே தெரிவுசெய்யப்பட்டார்.

இங்கு சபாநாயகர் உரையாற்றியபோது, 1970 முதல் ஆரம்பிக்கப்பட்டு கடந்த 55 ஆண்டுகளில் உறுதியாக விருத்தியடைந்துள்ள இலங்கைக்கும் வியட்நாமுக்குமிடையிலான வலுவான இருதரப்பு உறவுகளைச் சுட்டிக்காட்டினார். வர்த்தகம், முதலீடு, விவசாயம், சுற்றுலா மற்றும் கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்குமிடையிலான உறவு வளர்ந்துள்ளது என்பதை அவர் வலியுறுத்தினார்.

பிராந்தியத்தில் வர்த்தகம் மற்றும் முதலீட்டை விரிவுபடுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் வியட்நாமுடனான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த இலங்கையின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார். வியட்நாம் தேசிய சட்டமன்றத்தின் துணைத் தலைவர் நுகுயென் டக் ஹை (Nguyen Duc Hai) தலைமையிலான வியட்நாம் பாராளுமன்றத் தூதுக்குழு 2025 மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் சபாநாயகர் அறிவித்தார். “தூதுக்குழுவை வரவேற்பதற்கும் பயனுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கும் நாங்கள் மிகவும் ஆவலுடன் காத்திருக்கிறோம்” - என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ட்ரின் தி டாம், நட்புறவுச் சங்கத்தின் மறுமலர்ச்சி இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளில் ஒரு புதிய ஆரம்பமாகுமெனத் தெரிவித்தார். பாராளுமன்ற முறைமைகள் மற்றும் சட்டவாக்க செயல்முறை குறித்த அனுபவங்களையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதை எளிதாக்குவதற்கும் இரு நாடுகளின் சட்டமன்ற அமைப்புகளுக்கிடையே கலந்துரையாடல்கள் மற்றும் ஒத்துழைப்புகளுக்கு செயற்பாட்டு ரீதியான சந்தர்ப்பத்தை உருவாக்குவதில் நட்புறவுச்சங்கத்தின் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நட்புறவுச் சங்கத்தின் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரான அமைச்சர் (வைத்தியர்) தம்மிக பட்டபெந்தி கருத்துத் தெரிவிக்கையில், வர்த்தகம், நிலைபேறான அபிவிருத்தி, தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் பாராளுமன்ற ஈடுபாட்டை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஒத்துழைப்பை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் வியட்நாம் தூதுவர் வழங்கும் ஆதரவுக்கு அவர் தனது நன்றியையும் தெரிவித்தார்.

# விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தடுக்க காட்டு விலங்குகளைக் கட்டுப்படுத்துக!

## அநுராத ஜயரத்ன எம்.பி. கோரிக்கை



‘‘பயங்கரவாதிகளும் மனிதர்களே என்று போதனையளித்துக் கொண்டிருந்தால் அப்பாவி மக்களே பாதிக்கப்படுவார்கள். எனவே, காட்டு விலங்குகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல், விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்’’- என்று புதிய ஜனநாயக முன்னணியின் கண்டி மாவட்ட எம்.பி. அநுராத ஜயரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (12) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

‘‘எமது அரசாங்கத்தில் விவசாயிகள் பாதிக்கப்பட்டதால் தான் அரசாங்கம் நெருக்கடிக் குள்ளாகியது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே, நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் விவசாயத்துறை 8 சதவீத பங்களிப்புச் செய்கிறது. 23 இலட்சம் பேர் விவசாயத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபடுகின்றனர். இவர்களின் நலன் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும்.

காட்டு விலங்குகளால் ஏற்படும் பாதிப்பு நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளது. காட்டு விலங்குகளைப் பாதுகாக்க வேண்டுமென்று குறிப்பிடுபவர்கள் கிராமப்புறங்களில் வாழும் விவசாயிகள் எதிர்கொள்ளும் அவலநிலையை அறிவதில்லை.

எமது அரசாங்கத்திலும் இந்த நிலைமையே காணப்பட்டது. காட்டு விலங்குகள் தொடர்பில் விவசாயத்துறை அமைச்சர் தற்றுணிவுடன் குறிப்பிட்ட விடயத்தை வரவேற்கிறேன்.

பயங்கரவாதிகளும் மனிதர்களே என்று போதித்துக்கொண்டிருந்தால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவார்கள். காட்டு விலங்குகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல், விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். 2022 ஆம் ஆண்டு 93 மில்லியன் தேங்காய்களை காட்டு விலங்குகள் நாசம் செய்துள்ளன. 2022 ஆம் ஆண்டு மாத்திரம் காட்டு விலங்குகளால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு 30,215 மில்லியன் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, காட்டு விலங்குகளைக் கட்டுப்படுத்த வேண்டும்’’- என்றார்.

# காட்டு விலங்குகளை கணக்கெடுக்கும் தீர்மானம் முகாமைத்துவ கொள்கையை வகுப்பதற்காகவே

## அமைச்சர் லால்காந்த சுட்டிக்காட்டு



“இலங்கையிலுள்ள காட்டு விலங்குகள் இதுவரை காலமும் கணக்கெடுக்கப்படவில்லை. முகாமைத்துவக் கொள்கையை வகுப்பதற்காகவே காட்டு விலங்குகளைக் கணக்கெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. புதிய ஒரு விடயத்தை ஆரம்பிக்கும்போது எதிர்ப்புகளும் தோல்விகளும் ஏற்படும். அவற்றைக் கருத்திற்கொள்ளக் கூடாது’’- என கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் லால்காந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (13) உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

‘‘முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்க உட்பட அரச தலைவர்கள் விவசாயத்துறை மேம்பாட்டுக்காக பல சிறந்த திட்டங்களை மேற்கொண்டார்கள். அதேபோல், அண்மைக்கால அரச தலைவர்கள் விவசாயத்துறையை இல்லாதொழித்தார்கள் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடந்த காலத்தை விமர்சித்துக் கொண்டிருப்பது எனது வேலையல்ல . எமது அமைச்சினூடாக மக்களின் உணவுத் தேவையை முழுமைப்படுத்துவதே பிரதான பொறுப்பு.

கால்நடை வைத்திய சேவையில் அதிகளவில் பற்றாக்குறை காணப்படுகிறது. இதற்கு உடனடியாகத் தீர்வு காண்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறை மேம்பாட்டுக்கு நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சு விசேட பங்கு வகிக்கிறது. பல பிரச்சினைகளும் காணப்படுகின்றன.

அரிசித் தட்டுப்பாட்டுப் பிரச்சினையுடன் தான் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றோம். விவசாய நாடு என்று குறிப்பிடப்பட்டாலும் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. இது கவலைக்குரியது. துரிதமான செயற்பாடுகளினால் அரிசித் தட்டுப்பாட்டுக்கு தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது. நுகர்வோர் பற்றிப் பேசுவதற்கு முன்னர் விவசாயிகள் தொடர்பில் பேசவேண்டும். உற்பத்தித்துறையில் இலாபமடையும் தரப்பினராக விவசாயிகளை மேம்படுத்த வேண்டும். இதன் பின்னரே அரிசி மற்றும் மரக்கறிகளின் விலை தொடர்பில் அவதானஞ்செலுத்த முடியும்.

2024 / 2025 சிறுபோக விவசாயத்தில் நெல்லுக்கான விலை குறைவு, உற்பத்திச் செலவுக்கிணையாக அமையவில்லையென்று எவரும் குற்றஞ்சாட்டவில்லை. இம்முறை உத்தரவாத விலையைக் குறிப்பிடவில்லை. நெல் சந்தைப்படுத்தல் சபை இந்த அளவுக்கு நெல்லைக் கொள்வனவு செய்யுமென்றே அறிவித்தோம். ஆகவே, விவசாயிகள் இம்முறை நஷ்டமடையவில்லை. கடந்த காலங்களில் விவசாய நடவடிக்கைகளுக்கான காணிப்பகிர்வில் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன. ஆகவே, விவசாய நடவடிக்கைக்கான காணிப்பகிர்வின் போது விசேட கவனம் செலுத்தப்படும்.

காட்டு விலங்குகளைக் கணக்கெடுப்பது தொடர்பில் தற்போது பேசப்படுகிறது. இலங்கையில் காட்டு விலங்குகள் இதுவரை காலமும் கணக்கெடுக்கப்படவில்லை. காட்டு விலங்குகளால் விவசாயிகள் தான் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இலங்கையில் வனவிலங்கு முகாமைத்துவம் என்ற ஒன்று கிடையாது. ஆகவே, இந்த முகாமைத்துவ கொள்கையை வகுப்பதற்காகவே காட்டு விலங்குகளைக் கணக்கெடுக்கத் தீர்மானிக்கப் பட்டது.

புதிய ஒரு விடயத்தை ஆரம்பிக்கும்போது எதிர்ப்புகளும் தோல்விகளும் ஏற்படத்தான் செய்யும். அவற்றைக் கருத்திற்கொள்ளக் கூடாது. ரைட் சகோதரர்கள் விமானத்தை ஒரே கட்டமாகக் கண்டுப்பிடிக்கவில்லை. ஆகவே, வனவிலங்கு முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகள் கட்டங்கட்டமாக முன்னெடுக்கப்படும்’’- என்றார்.

# இந்திய பட்டதாரி ஆசிரியர்களை நாட்டுக்கு அழைத்துவர வேண்டுமென நான் கோரவில்லை

## திரிபுபடுத்தப்பட்ட செய்தி என்கிறார் இராதா எம்.பி.



இந்திய பட்டதாரி ஆசிரியர்களை நாட்டுக்கு அழைத் துவர வேண்டுமென நான் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கவில்லை. ஆங்கில பத்திரிகை யொன்றும் இணைய தளங்களும் எனது உரையை திரிபுபடுத்தி வெளியிட்டுள்ளன என மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நுவரெலியா மாவட்ட எம்.பியுமான வே. இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (12) உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், தொடர்ந்து பேசுகையில்,

‘‘கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கல்வியமைச்சின் நிதியொதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் நான் ஆற்றிய உரையை சரியாகப் புரிந்துகொள்ளாமல் ஆங்கிலப் பத்திரிகையொன்றும் இணையதளங்களும் தவறாகச் செய்தி வெளியிட்டுள்ளன.

அதாவது, நான் எனது உரையின்போது, 2017ஆம் ஆண்டு நான் பிரதிக் கல்வியமைச்சராக இருக்கும்போது பெருந்தோட்டப் பாடசாலைகளில் காணப்படும் முக்கியமான ஆசிரிய வெற்றிடங்களுக்கு இந்தியாவிலிருந்து பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தபோது, மக்கள் விடுதலை முன்னணி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. அதனால் நாங்கள் அந்த நடவடிக்கையை கைவிட்டோமென்றே தெரிவித்திருந்தேன்.

ஆனால், ஆங்கில பத்திரிகையொன்றில் இந்தியாவிலிருந்து ஆசிரியர்களைக் கொண்டு வரவேண்டுமென நான் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது முற்றிலும் நான் தெரிவித்த கருத்துக்கு முரணானதாகும்.

அதேபோன்று, இணையதளங்களிலும் இந்தச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் சமூக வலைத்தளங்களில் எனக்கெதிராக கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. எனவே, நான் தெரிவித்த விடயத்தை தலைகீழாக மாற்றி பிரசுரித்தமைக்கு நான் பொறுப்பில்லை ’’- என்றார்.



மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மாசிமக தேர்த் திருவிழா நேற்று (12) நடைபெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்ற பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீபன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.இராஜரட்ணம் ஆகியோருக்கு ‘தமிழன்’ பத்திரிகை கையளிக்கப்பட்டது. (படம்: அருணாசலம் லெட்சுமணன், டி.வசந்த், புசல்லாவை நிருபர் )

# நியாயமான சந்தையில் அபிவிருத்தி எதிர்பார்ப்புகளை வெற்றிகொள்ள இலங்கைக்கு JICA - JFTC ஆதரவு





நுகர்வோரையும் உற்பத்தியாளரையும் பாதுகாத்து இலங்கையில் தரமான பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தை உறுதி செய்வதற்குத் தேவையான கொள்கை ரீதியான மாற்றங்கள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு மேம்பாடுகளுக்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மற்றும் ஜப்பான் நியாய வர்த்தக ஆணைக்குழு (JFTC) ஆகியவை ஆதரவு தெரிவித்துள்ளன.

குறித்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று (12) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்தபோது இது குறித்து கலந்துரையாடப்பட்டது.

வர்த்தகத்தில் நியாயபூர்வமிக்க தன்மையை உருவாக்குவதன் மூலம் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் பாதுகாக்கப்படுவதோடு, இதன் மூலம் நாட்டில் போட்டிமிக்க சந்தை உருவாக்கப்படுகின்றது என்றும் பிரதிநிதிகள் குழு இங்கு சுட்டிக்காட்டியது.

இந்தப் போட்டித்தன்மை வாய்ந்த வர்த்தகக் கொள்கை, குறிப்பாக ஜப்பான் அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்துக்கு எவ்வாறு பங்களித்துள்ளது என்பதை பிரதிநிதிகள் குழு எடுத்துரைத்ததுடன், நுகர்வோர் உரிமைகள் மற்றும் புத்தாக்கங்களுக்கு அதன் பங்களிப்பை விளக்கியது.

இலங்கை சந்தையை உயர் தரத்துக்கு உயர்த்துவதன் மூலம் நியாயமான வர்த்தகத்தை உறுதி செய்வதற்குத் தேவையான கொள்கை மாற்றங்கள் குறித்து இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் கவனம் செலுத்தியுள்ளதாக இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர், மேலும் அந்தத் திட்டங்கள் குறித்து பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தினார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபோன்சு, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) சார்பாக , டெட்சுயா யமாடா, (Tetsuya YAMADA)அரிசா இனாடா,(Arisa INADA), யூரி ஹொரிட்டா, (Yuri HORRITA) நாமல் ரலபனாவ, ஜப்பான் நியாய வர்த்தக ஆணைக்குழு (JFTC) சார்பாக வை. சகுமா, (Y. Sakuma) வை. அசஹினா (Y. Asahina), வை. ஃபுகுஷிமா(Y. Fukushima),எம். டகுசி (M.Takeuchi) ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்குமாறு கோரி பாட்டாளிபுரம் மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்





(தோப்பூர் நிருபர்)

மூதூர் வலயக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாட்டாளிபுரம் பாமகள் தமிழ் வித்தியாலயத்தில் மிக நீண்ட காலமாக கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலான முக்கிய பாடங்களுக்காக 11 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஆசிரியர் நியமனங்களை வழங்குமாறும் பெற்றோர்கள் கொட்டும் மழைக்கும் மத்தியிலும் நேற்று முன்தினம் (11) பாடசாலைக்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாட்டாளிபுரம் பாமகள் தமிழ் வித்தியாலயமானது 352 பிள்ளைகள் கற்கின்ற தரம் 1 முதல் தரம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்ட அதிகஷ்ட பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலையாகும்.

பெற்றோர் தமது பிள்ளைகளது கல்வியுரிமை மறுக்கப்பட்டு அநீதி இழைக்கப்படுவதான பதாதைகளை ஏந்தியவாறு பாடசாலைக்கு முன்பாகத் திரண்டு கோசங்களை எழுப்பியவாறு சுமார் இரண்டு மணித்தியாலங்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன், மூதூர் வலயக்கல்விப் பணிமனையின் நிருவாகத்துக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் மற்றும் சம்பூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களினால் கல்வியமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரினி அமரசூரியவிடம் கையளிப்பதற்கான மகஜரை உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் கையளித்திருந்தனர்.

தமது நியாயமான கோரிக்கைகள் குறுகிய கால அவகாசத்துக்குள் தீர்க்கப்படாவிட்டால் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வலயக்கல்வி அலுவலகம் மற்றும் மாகாணக்கல்வி அலுவலகம் வரை நீதி கோருவோம் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் கருத்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் 17 மன்றங்களுக்கு கட்டுப்பணத்தை செலுத்திய தேசிய மக்கள் சக்தி



(பெல்மதுளை நிருபர் )

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேசிய மக்கள் சக்தி கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத் தேர்தல் திணைக்களத்தில் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான சாந்த பத்மகுமார தலைமையிலான குழுவினர் நேற்று (12) கட்டுப்பணத்தை செலுத்தினர்.

# கிண்ணியாவில் வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு






(சீனக்குடா செய்தியாளர்)

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய பெண் வைத்தியரைக் கத்திமுனையில் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளியை கைதுசெய்யுமாறு வலியுறுத்தி கிண்ணியாவிலும் வைத்தியர்கள் நேற்று புதன்கிழமை (12) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக நேற்று காலையிலிருந்து வைத்தியசாலைகளுக்குச் சென்ற நோயாளர்கள், ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

கிண்ணியா தள வைத்தியசாலை, காக்காமுனை ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையம், நடுவூற்று பிரதேச வைத்தியசாலை ஆகியவற்றில் நோயாளர்களுக்கான வைத்திய சேவைகள் இடம்பெறவில்லை. இதேவேளை, அவசர சிகிச்சைப் பிரிவு மாத்திரம் இயங்கியதை அவதானிக்க முடிந்தது.

# தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர் எனக்கூறி அடாவடியில் ஈடுபட்டவர் கைது

(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு, பட்டிருப்புத் தேர்தல் தொகுதியின் தேசிய மக்கள் சக்தி கட்சி அமைப்பாளர் எனத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு அக்கட்சிக்காகச் செயற்பட்டு வந்தவர் செவ்வாய்க்கிழமை (11) மாலை களுவாஞ்சிக்குடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள பாலர் பாடசாலையொன்றுக்குள் குறித்த நபர் சம்பவதினம் புகுந்து ஏன் பிள்ளைகள் இன்றையதினம் குறைவாக வந்துள்ளார்கள், என்ன காரணம் எனக் கேட்டு அங்கிருந்த பாலர் பாடசாலை ஆசிரியையுடன் தர்க்கம் புரிந்து தகாத வார்த்தைப் பிரயோகம் செய்துள்ளார். மேலும் நீங்கள் எடுத்த வீடியோவை வெளியிட்டால் உம்மை இருந்த இடம் தெரியாமல் ஆக்குவேன் எனவும் அச்சுறுத்தியுள்ளார்.

குறித்த ஆசிரியை அவரது செயற்பாடுகளை தனது கைபேசியில் வீடியோ எடுத்துள்ளார். இதன்போது ஆசிரியையை குறித்த நபர் தாக்க முற்பட்டுள்ளார். அதன்போது குறித்த நபரின் நகம் ஆசிரியையின் கையில் கிழித்துள்ளதாக குறித்த ஆசிரியை தெரிவிக்கின்றார். இந்நிலையில், ஆசிரியை களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைவாக அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இது இவ்வாறிருக்க, குறித்த ஆசிரியை களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்படி நபர் மாத்தளையைச் சேர்ந்தவரெனவும் பல்கலைக்கழகமொன்றில் விரிவுரையாளராக செயற்பட்டு தேசிய மக்கள் சக்திக்காக அதனையும் துறந்துவிட்டு மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்புத் தொகுதி மக்களுக்காக வந்து சேவை செய்து வருவதாகவும் தன்னை அடையாளம் காட்டிக்கொண்டு இப்பகுதியில் அக்கட்சிக்காக செயற்பட்டு வந்தவராவார்.

பட்டிருப்பு தொகுதிக்குரிய தமது கட்சியின் அமைப்பாளராக தவஞானசூரியம் என்பவர்தான் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்குறித்த நபர் தமது கட்சியின் அத்தொகுதிக்குரிய அமைப்பாளர் இல்லை. மாறாக எமது கட்சிக்காக தேர்தல் காலத்தில் அங்கு வந்து வேலை செய்தவர்தான். ஆனால், தேர்தல் முடிந்த கையோடு அவரை அவருடைய மாவட்டத்துக்கு அனுப்பி வைத்துவிட்டோம். அதனையும் கடந்த அவர் இப்பகுதியில் நின்றுள்ளார் என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.பிரபு தெரிவித்தார்.

இதேவேளை, சந்தேகநபர் தேசிய மக்கள் சக்தி கட்சியால் பட்டிருப்பு தொகுதிக்காக உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட அமைப்பாளர் அல்ல. அவர் தன்னிச்சையாகவே அத்தொகுதிக்கு வந்து செயற்பட்டு வந்தவர் என அக்கட்சியைச் சேர்ந்த மற்றுமொருவர் தெரிவித்தார்.

# பொத்துவில் பிரதேச சபையை மக்கள் காங்கிரஸ் கைப்பற்றும்

## முன்னாள் உதவித் தவிசாளர் தாஜுதீன்



(கோணாவத்தை செய்தியாளர்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொத்துவில் பிரதேச சபையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அதிகப்படியான வாக்குகளால் கைப்பற்றுமென பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உதவித் தவிசாளர் ஏ.எம்.ஏ.தாஜுதீன் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் திங்கட்கிழமை(10) நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் பொத்துவில் பிரதேசத்துக்கு பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்றுத் தந்தது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தான் என்பதை பொத்துவில் மக்கள் மறந்துவிட முடியாது. இவ்வாறு பொத்துவில் வரலாற்றில் முதல் தடவையாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கட்சி ரீதியாகத் தெரிவு செய்து தந்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸை ஆதரிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு பொத்துவில் பிரதேச மக்களுக்கு இருக்கிறது என்பதை யாரும் மறுத்துரைக்க முடியாது.

அம்பாறை மாவட்டத்தில் தவிர்க்க முடியாத ஓர் அரசியல் அங்கமாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வளர்ந்து வருகிறது. இதனடிப்படையில் பொத்துவில் பிரதேசத்துக்கான அரசியல் அதிகாரத்தை தக்கவைப்பதற்கான முயற்சியாக பொத்துவில் பிரதேச சபையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கைப்பற்றுவதன் மூலம் இன, மத பேதங்களுக்கப்பால் இதை அபிவிருத்தியடைந்த ஒரு பிரதேசமாக மாற்றுவதற்கு முயற்சிக்க முடியும்.

இப்பிரதேசத்துக்கு பல்வேறு விதமான வரப்பிரசாதங்களைப் பெற்றுத்தருகிறோம் எனக் கூறி மக்களை பல்வேறு கட்சிகள் ஏமாற்றி வந்த கடந்த கால வரலாற்றை மறந்துவிட முடியாது. இவ்வாறான நிலைமைகளை அறிந்து பொத்துவில் மக்கள் ஒற்றுமையுடன் செயற்படுகின்றபோது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக பொத்துவில் பிரதேச சபையை கைப்பற்றுவதன்மூலம் எமது பிரதேசத்தின் ஒற்றுமையை வெளிக்காட்டுவது மட்டுமல்லாமல், அபிவிருத்தியையும் மேற்கொள்வதற்கு அது வாய்ப்பாக அமையுமென்பதை பொத்துவில் பிரதேச வாக்காளர்கள் கவனத்தில்கொள்ள வேண்டும்.

எனவே, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொத்துவில் மக்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸை ஆதரிப்பதற்கு முன்வர வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

# இஸ்லாமிய பாரம்பரிய கலைகளின் மூன்று நூல்களின் அறிமுக நிகழ்வு



(சீனக்குடா, தம்பலகாமம் செய்தியாளர்கள்)

கிண்ணியா எழுத்தாளர்களால் தொகுக்கப்பட்ட இஸ்லாமிய பாரம்பரிய கலைகளின் மூன்று நூல்களின் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம்(11) கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முஹம்மட் கனி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவலகத் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து வெளியீடு செய்துள்ள பக்கீர்பைத் பாரம்பரியம், களிகம்பு மற்றும் கஸீதா ஆகிய 03 நூல்கள் கலைஞர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் விசேட அதிதிகளாக கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்கள திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சி.எம். முஸ்ஸில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் வரவேற்புரையை எழுத்தாளர் ஏ.எம்.கஸ்புல்லா நிகழ்த்திய அதேவேளை, நூல் அறிமுகத்தை இலக்கிய ஆர்வலர் எம்.எஸ்.எம்.நியாஸ், எழுத்தாளர் பீ.ரீ.அஸீஸ், எழுத்தாளர் திருமதி முகைமினா மூஸா ஆகியோர் நிகழ்த்தினர். கிண்ணியா முன்னோடிகள் கலை, இலக்கிய வட்டமும் கிண்ணியா பிரதேச செயலக கலாசாரப் பிரிவும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.



மகளிர் தினத்தை முன்னிட்டு மண்முனை மேற்கு பிரதேச செயலக சிறுவர் மற்றும் மகளிர் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியும் விற்பனையும் பிரதேச செயலாளர் ந.சத்தியானந்தி தலைமையில் செவ்வாய்க்கிழமை(11) வவுணதீவு சந்தை வளாகத்தில் இடம்பெற்றது. பெண் தொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்ததுடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பொருட்களைக் கொள்வனவு செய்தனர்.(மட்டக்களப்பு)

# நெற்களஞ்சியசாலைகளை உடைத்து காட்டு யானைகள் துவம்சம்



(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டு கிராமத்தில் உள்நுழைந்த காட்டு யானைகள் நெற்களஞ்சியசாலைகளை உடைத்து துவம்சம் செய்துள்ளன.

காட்டு யானைகள் நேற்று (12) அதிகாலை 3.00 மணியளவில் மீனோடைக்கட்டு கிராமத்தில் உள்நுழைந்து பிரதான வீதியில் அமைந்துள்ள நெற்களஞ்சியசாலைகளை உடைத்து பல நெல் மூடைகளை உண்டு நாசம் செய்து சேதத்தை ஏற்படுத்தின.

மீலாத்நகர், சம்புநகர், ஆலம்குளம், மீனோடைக்கட்டு கிராமங்கள் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் பொதுமக்களின் பொருளாதாரத்தில் இது பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தமிழரசுக் கட்சி உறுப்பினர் காண்டீபன் பதவி விலகினார்

(மட்டக்களப்பு செய்தியாளர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சி.காண்டீபன் அக்கட்சியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்து கட்சியின் பதில் பொதுச் செயலாளருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவித்துள்ளதாவது,

சி.காண்டீபன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், ம.தெ.எ.பற்று பிரதேச சபை, எருவில் வட்டாரம் எனும் விபரமுடைய நான் தங்கள் மேலான கவனத்துக்கு அறியத்தருவது யாதெனில், இலங்கைத் தமிழரசு கட்சியின் ஆயுட்கால உறுப்பினரும் எருவில் வட்டார தமிழரசுக் கட்சியின் வட்டார கிளைக்குழுத் தலைவராகவும் பிரதேசக் கிளை உறுப்பினராகவும் பதவி வகித்து வருகிறேன்.

கடந்த 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எருவில் வட்டாரத்தில் போட்டியிட்டு அளிக்கப்பட்ட வாக்குகளில் 50 வீதத்துக்கும் அதிகமான மக்கள் ஆணையைப்பெற்று சிறந்த முறையில் மக்களுக்கு சேவையாற்றி கட்சி வளர்ச்சிக்காகவும் செயற்பட்ட எனக்கு இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தகுந்த காரணங்கள் எதுவுமின்றி மாற்றுக் கட்சியில் இருந்து தமிழரசுக் கட்சியில் இணைந்த களுவாஞ்சிக்குடி வட்டார வேட்பாளரை தவிசாளர் ஆக்குவதற்கு நான் இடையூறாக இருப்பேன் என்கின்ற ஒரே காரணத்துக்காக கட்சியின் ஜனநாயகப் பண்புகளுக்கு முரணாக எனக்கு வேட்பாளராக இடம் தராமல் புறக்கணிக்கப்பட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டேன்.

இது சம்பந்தமாக கட்சியின் முக்கியஸ்தர்கள் அனைவருக்கும் அச்சமயம் எழுத்து மூலம் அறிவித்தும் இன்றுவரை சம்பந்தப்பட்ட எவரிடம் இருந்தும் எவ்வித பதிலும் கிடைக்காமல் ஏமாற்றமும் விரக்தியும் அடைந்துள்ளேன். அந்த வகையில், அரசியல் நடைமுறைக்கு மாறாகவும் ஜனநாயகப் பண்புகளுக்கு முரணாகவும் கட்சி செயற்பட்டுள்ளதாலும் கட்சிக்குள் காணப்படும் உட்கட்சி முரண்பாடுகளினால் மக்கள் மத்தியில் கட்சியின் செல்வாக்கு குறைந்துள்ளதுடன் மக்கள் கட்சியில் அதிருப்தி அடைந்துள்ளதாலும் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால அங்கத்துவத்தில் இருந்தும் கட்சியில் நான் வகித்து வரும் சகல பதவிகளிலிருந்தும் மிகுந்த மனவேதனையுடன் எனது சுயவிருப்பின் பேரில் இராஜிநாமாச் செய்கின்றேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(மீராவோடை செய்தியாளர்)

மீராவோடை பாடசாலை வீதியைச் சேர்ந்த மௌலவி எம்.எச்.எம். றிஸ்வி (சிறாஜி) தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக செவ்வாய்க்கிழமை(11) மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதவான் எச்.எம்.எம்.பஷீல் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

வெலிகந்தை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தரான இவர், மர்ஹூம் எஸ்.எம்.ஹுசைன் - என்.எம்.ஆமினா உம்மா தம்பதியின் புதல்வராவார்.



ஓட்டமாவடி மூன்றாம் வட்டாரத்தில் வசித்து வரும் அப்துல் கபூர் சாதிகீன் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக செவ்வாய்க்கிழமை(11) மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதவான் எச்.எம்.முஹம்மட் பஷீல் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், மதீனா இஸ்லாமிய பல்கலைக்கழக இளங்கலைப் பட்டதாரியும் மீராவோடை உம்மு சுலைம் மகளிர் அரபுக் கல்லூரியின் பிரதி அதிபரும் தியாவட்டவான் பதிவாளர் பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளருமாவார்.



அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியிலிருந்து 2025 க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் விடுகை விழாவும் மாணவர்களின் பங்களிப்பால் கொள்வனவு செய்யப்பட்ட நிழல் பிரதி இயந்திரம் கையளிக்கும் நிகழ்வும் தரம் 10, 11 வலயத் தலைவர் எம்.ஐ.அப்துல் றசாக் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது அதிபர் திருமதி நசீபா இக்பால், வலயத் தலைவர் எம்.ஐ.அப்துல் றசாக், உதவி வலயத் தலைவர் ஏ.எல்.எம்.நுஸ்கி ஆகியோர் தரம் 11 மாணவர்களின் பெற்றோர்களால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அக்கரைப்பற்று செய்தியாளர்)



கப்ஸோ நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட்டின் வேண்டுகோளின்பேரில் கட்டார் சரிட்டி நிறுவனத்தின் அனுசரணையில் அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தேவையுடைய சுமார் 700 குடும்பங்களுக்கான 25,000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்கள் 2ஆம் கட்ட விநியோகம் செவ்வாய்க்கிழமை(11) வழங்கப்பட்டன. (சம்மாந்துறை செய்தியாளர்)

# அரசின் கொள்கைப்பிரகடனம் ஜே.வி.பியின் காரியாலயத்திலும் வரவு - செலவுத் திட்டம் ரணிலின் அதிகாரிகளாலும் தயாரிக்கப்பட்டவை

## இரண்டுக்கும் இடையில் வித்தியாசம் என்கிறார் நளின் பண்டார எம்.பி.



அரசின் கொள்கைப் பிரகடனம் ஜே.வி.பியின் பெலவத்த காரியாலயத்தில் தயாரிக்கப்பட்டது. வரவு - செலவுத் திட்டம் ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டது. அதனால் வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன புத்தகத்தை வெறுமனே நாவலாகவே பார்க்கிறோம். ஏனெனில், அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்துக்கும் வரவு - செலவுத் திட்ட அறிக்கைக்கும் இடையில் பாரிய வித்தியாசம் காணப்படுகின்றதென ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. நளின் பண்டார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (12) உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

இரசாயன உரத்தை தடைசெய்து பசளை உரத்தை உடனடியாக செயற்படுத்த தீர்மானித்ததன் விளைவாக கோட்டாபய அரசாங்கம் மக்கள் போராட்டம்மூலம் விரட்டியடிக்கப்பட்டது. அந்த அரசாங்கத்தின் பிழையான தீர்மானத்தினால் பெரும்போகத்தில் நூற்றுக்கு 37 வீத அறுவடையும் சிறுபோகத்தில் நூற்றுக்கு 30வீத அறுவடையும் குறைந்தது. அந்தப் பாதிப்பும் இன்னும் கமத்தொழிலில் தாக்கம் செலுத்தி வருகிறது.

தேங்காய் தட்டுப்பாட்டுக்கும் கோட்டாபயவின் இரசாயன உரத் தடை தாக்கம் செலுத்தி இருக்கிறது. எவ்வாறு இருந்தாலும் நாடு வங்குரோத்து அடைவதற்கும் விவசாயத்துறை வீழ்ச்சியடையவும் காரணமாக இருந்த கோட்டாபயவை அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்கு தற்போதைய அரசாங்கத்தில் உள்ளவர்களும் பங்காளிகளாக இருந்தனர்.

மேலும், அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்துக்கும் வரவு - செலவுத் திட்ட அறிக்கைக்கும் இடையில் பாரிய வித்தியாசம் உள்ளது. ஏனெனில் கொள்கைப் பிரகடனம் ஜே.வி.பியின் பெலவத்த காரியாலயத்தில் தயாரிக்கப்பட்டது.

வரவு-செலவுத் திட்டம் ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டது. அதனால்தான் கொள்கைப் பிரகடனத்தின் 112ஆம் பக்கத்தில், இலங்கையின் கமத்தொழில் காணிகளில் ஒரு ஏக்கரில் வருடாந்தம் 03 மில்லியன் ரூபா வருமானத்தை தேடிக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஒருபோதும் சாத்தியப்படாது.

எமது காணிகளில் பெரும்பான்மையான காணி வயல் காணிகளாகும். இந்தக் காணியில் இரண்டு போகத்தில் அறுவடை செய்தாலும் 05 இலட்சம் ரூபா வருமானத்தைக்கூட பெற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறிருக்கையில், கமத்தொழில் காணியில் ஒரு ஏக்கரில் 03 மில்லியன் ரூபா வருமானம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தால், எம்மிடம் இருக்கும் 60 இலட்சம் ஏக்கர் காணியில் 18ஆயிரம் பில்லியன் ரூபா கிடைக்கிறது. அப்படியானால் வேறு எந்த வேலைத்திட்டமும் எமக்கு தேவையில்லை. அதனால் வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன புத்தகத்தை வெறுமனே நாவலாகவே பார்க்கிறோம்.

அதேபோன்று வரவு - செலவுத்திட்ட அறிக்கையை பார்த்தால், அதில் பயிர்ச் சேதங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க 2024இல் அதற்காக நிதி ஒதுக்கி இருந்தார். அதனால் கமத்தொழில் நடவடிக்கையில் அரசாங்கத்தின் மறுமலர்ச்சிக்கான எந்த வேலைத்திட்டத்தையும் இங்கு காணக்கூடியதாக இல்லை.

மேலும், நாட்டில் பயிரிடப்படும் மரக்கறி வகைகளை பயிரிடும் விவசாயிகளை கணக்கிட்டு தரவுகளை சேகரிக்காமல் அரசாங்கம் நாட்டில் இருக்கும் குரங்குகளை கணக்கிட நடவடிக்கை எடுத்துள்ளது. 05 நிமிடங்களில் இந்தக் கணக்கீட்டை எவ்வாறு செய்ய முடியும்? அதனால் அரசாங்கம் குரங்குகளை கணக்கிட எடுத்திருக்கும் நடவடிக்கை வெற்றியளிக்கப்போவதில்லை. இதனை கைவிட்டு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படுகின்ற சட்டவிரோத கமத்தொழில் இரசாயனப் பொருட்கள் வியாபார நிலையங்களில் காணப்படுகின்றன. அவை தொடர்பில் கணக்கீடு செய்ய வேண்டும். அதுவே முக்கியம் என்றார்.

# கைதிகளின் எண்ணிக்கையை குறைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவிப்பு



''சிறைச்சாலைகளில் 10 ஆயிரத்து 700 கைதிகளுக்கே இடமுள்ளது. எனினும், சிறைச்சாலை கட்டமைப்புக்குள் தற்போது 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் உள்ளனர். கொழும்பு, வெலிக்கடை உட்பட சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதால் பாரிய இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதனை நிவர்த்திக்கும் வகையில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்'' என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (13) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. கிங்ஸ் நெல்சன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கிங்ஸ் நெல்சன் எம்.பி. தனது கேள்வியின்போது,

''கொழும்பு, வெலிக்கடை சிறைச்சாலையில் 1,400 சிறைக் கைதிகளை தடுத்து வைக்கக்கூடிய இடத்தில் 3,579 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பொலனறுவை போன்ற சிறைச்சாலைகளிலும் இவ்வாறான நிலைமையே காணப்படுகிறது. அது தொடர்பில் நீதி அமைச்சு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கை என்ன'' எனக் கேட்டார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார,

''பொதுவாக நோக்கும்போது சிறைச்சாலைகளில் 10ஆயிரத்து 700 கைதிகளுக்கே இடம் உள்ளது. எனினும் சிறைச்சாலை கட்டமைப்புக்குள் தற்போது 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் காணப்படுகின்றனர். அவர்களின் 19,000 பேர் விளக்கமறியல் கைதிகளாக உள்ளனர். கொழும்பு, பொலனறுவை உள்ளிட்ட பல்வேறு சிறைச்சாலைகளிலும் இட நெருக்கடி காணப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களிலும் அந்த நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கப்படவில்லை ஆனால், இம்முறை அதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். அதற்கான முறைமை ஒன்றை தயாரிப்பதற்காக நான் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் குழுவொன்றை நியமித்துள்ளேன்.

குறிப்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்படும். சிறைச்சாலைகளில் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்ட கைதிகள் பகுதியில் இட நெருக்கடி காணப்படவில்லை. அந்த வகையில் மேற்படி குழுவின் பரிந்துரைக்கமைய இட நெருக்கடியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.

# விசேட தேவையுடைய பயணிகளின் வசதிக்காக மாகும்புரையில் ஒருங்கிணைந்த ஆதரவு மையம்




விசேட தேவையுடைய பயணிகளின் வசதிக்காகவும் பொதுப் போக்குவரத்தை அணுகுவதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவதற்கும் பொதுப் போக்குவரத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் மாகும்புர பன்முக போக்குவரத்து மையத்தை மையமாகக் கொண்டு ஒருங்கிணைந்த ஆதரவு மையம் ஒன்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் வைத்தியர் பிரசன்ன குணசேன தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

மாகும்புர பன்முக போக்குவரத்து மைய வளாகத்தில் நேற்று முன்தினம் (11) முற்பகல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் சிறப்பு நிறுவுதல் மூலம் அவசர அறிவிப்பு எண் கேட்கும் திறன் குறைபாடுள்ள பயணிகளுக்கு தகவல் தொடர்பு வசதி மற்றும் தகவல்களைப் பெறுவதற்கான வசதி போன்ற பல சேவைகள் கிடைக்கும். இதன் சிறப்பம்சம் என்னவென்றால், இந்த ஆதரவு மையத்தில் விசேட தேவையுடைய ஊழியர்கள் மட்டுமே சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த நிகழ்வுடன் மாகும்புர பன்முக போக்குவரத்து மையத்தின் இணையதளமும் ஆரம்பிக்கப்பட்டது.

# வான்பாயும் 42 நீர்த்தேக்கங்கள்


நாடு முழுவதும் உள்ள 73 பிரதான நீர்த்தேக்கங்களில் 42 நீர்த்தேக்கங்கள் நேற்று (12) காலை நிலைவரப்படி பலத்த மழையினால் நிரம்பி வழிவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அம்பாறை மாவட்டத்தில் 07, அநுராதபுரத்தில் 06, பதுளையில் 05, பொலனறுவையில் 03 மற்றும் திருகோணமலையில் 03 நீர்த்தேக்கங்களும் நிரம்பி வழிகின்றன.

மின்னேரியா, கவுடுல்ல, கந்தளாய், இராஜாங்கனை, லுணுகம்வெஹெர, சேனநாயக்க சமுத்திரம் மற்றும் பராக்கிரம சமுத்திரம் ஆகியவை நீர்நிரம்பி வழியும் நீர்த்தேக்கங்களில் முக்கியமானவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து நீர் நிரம்பி வழிந்தாலும் நீர்த்தேக்கங்களில் மொத்த நீர் சேமிப்பு திறனில் 93 சதவீதத்தை வெற்றிகரமாக தக்க வைத்துக் கொண்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# திருக்குறள்கள் கூறி அர்ச்சுனா எம்.பிக்கு அறிவுரை சொன்ன நிசாம் காரியப்பர் எம்.பி.



திருக்குறள்கள் கூறி அர்ச்சுனா எம்.பி.க்கு அறிவுரை சொன்ன ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் எம்.பியான நிசாம் காரியப்பர், பிற இனத்தையும் மதத்தையும் அவமதிக்கும் வகையிலும் புண்படுத்தும் வகையிலும் பேசுவது தமிழர் பண்பாடல்ல, பதவிக்கான கௌரவத்தை அவர் பாதுகாத்துக் கொண்டு முறையற்ற வகையில் பேசுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் அவருக்கு எதிராக பாராளுமன்றத்தில் சிறப்பு பிரேரணையை கொண்டு வர நேரிடும் எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (11) உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

''பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் செயற்பாடுகள் தொடர்பில் குறிப்பிட வேண்டும். பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்துகொண்டு எதனையும் பேச முடியாது. பேசும் வார்த்தையில் இனிமை இருக்க வேண்டும். வாய்மை மற்றும் சொல்வாண்மை இருத்தல் வேண்டும்.

வாய்மை தொடர்பில் திருவள்ளுவர் "வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமை இலாத சொல்" என்று குறிப்பிட்டுள்ளார். பிறருக்கு சொல்லால் கூட தீங்கிழைக்கக் கூடாது என்று இந்த குறளுக்கு பொழிப்புரைக்கப்படுகிறது.

அதேபோல் வள்ளுவர் "ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்" என்றும் குறிப்பிட்டுள்ளார். ஒழுக்கமே அனைத்துக்கும் மேன்மை தருவதால் அந்த ஒழுக்கம் உயிரிலும் மேலானதாக மதிக்கப்படும். பாராளுமன்ற உறுப்பினர்களை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் என்று அழைப்பார்கள். ஆகவே அனைவரும் இந்த மரியாதைக்கு அமைவாக நடந்துகொள்ள வேண்டும்.

பிற இனத்தையும் மதத்தையும் அவமதிக்கும் வகையில் பேசுவது தமிழர் பண்பாடல்ல. அர்ச்சுனா எம்.பி. பிற சமூகத்தை புண்படுத்தும் வகையில் பேசுகிறார். இது கவலைக்குரியது. பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்து கொண்டு எதனையும் பேச முடியாது. இவ்வாறான செயற்பாடுகளை அவர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் நாங்கள் பாராளுமன்றத்தில் விசேட பிரேரணையை கொண்டு வர நேரிடும்'' என்றார்.

# வரியை நம்பி செயற்படும் அரசாங்கம் அரிசியை இறக்குமதிசெய்து அதில் 65 ரூபாவை அறவிடும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது

## பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



''வரியை நம்பி அரசாங்கம் செயற்படுவதால் அரிசியை இறக்குமதி செய்து அதில் 65 ரூபா வரியை அறவிடும் நடவடிக்கையும் இடம்பெறுகின்றது. நெல்லுக்கு நியாயமான விலையை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (12) உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது நாமல் ராஜபக்ஷ மேலும் கூறுகையில்,

''2005ஆம் ஆண்டில் நெல் கிலோவொன்று 08 ரூபாவுக்கே இருந்தது. ஆனால் அன்று அந்த விவசாயிகளுக்கு கௌரவத்தையும் சிறந்த வருமானத்தையும் கொடுப்பதற்காக அரசாங்கம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது. இதன்போது அரிசியில் தன்னிறைவடையும் நிலைக்கு சென்றது. நெல் களஞ்சியத்துக்கு இடவசதிமின்றி மத்தள விமான நிலையத்தையும் களஞ்சியசாலையாக மாற்றும் நிலைமையும் காணப்பட்டது.

இந்த அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருந்தபோது விவசாயிகளுக்காக போராட்டங்களை நடத்தியது. அப்போது வழங்கிய வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் செயற்படுத்தும் என்று நினைக்கின்றோம். இதன்படி நெல்லுக்கு நியாயமான விலையை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகின்றோம்.

எவ்வாறாயினும், விவசாயிகளின் வருமானம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. வரியை நம்பி அரசாங்கம் செயற்படுவதால் அரிசியை இறக்குமதி செய்து அதில் 65 ரூபா வரியை அறவிடும் நடவடிக்கையும் இடம்பெறுகின்றது. எவ்வாறாயினும், விவசாயிகளுக்கு வசதிகளை ஏற்படுத்தி சிறந்த அறுவடையை பெற்றுக்கொள்ள வேண்டும். விவசாயிகளுக்கு நல்லது நடக்குமாக இருந்தால் விவசாயிகளை இறக்கி நாங்கள் போராட்டம் நடத்தப்போவதில்லை. விவசாயிகளுடன் தனியார் மற்றும் அரச நிறுவனங்களை இணைத்து பயணிக்க வேண்டும்.

இதேவேளை, 15ஆம் திகதி குரங்குகள், மர அணில்கள் ஆகியவற்றை சரியாக கணக்கிட நாம் அரசாங்கத்துக்கு வாழ்த்துகளை தெரிவிக்கின்றோம். அதேபோன்று இதற்கான எமது ஒத்துழைப்பை வழங்குவோம். நாங்களும் அவற்றை எண்ணி அது தொடர்பான எண்ணிக்கையை அனுப்பி வைக்கின்றோம்'' என்றார்.

# வனவிலங்குகளை கணக்கெடுப்பதற்கு விசேட செயற்பாட்டு அறை அமைப்பு



நாடுபூராகவும் நடைபெறவுள்ள வனவிலங்கு கணக்கெடுப்பை எதிர்வரும் 15ஆம் திகதி காலை 8.00 மணிமுதல் 8.05 மணிவரை மிகவும் துல்லியமாகவும் திறமையாகவும் நடத்தும் நோக்கில் கமத்தொழில் அமைச்சின் வளாகத்தில் செயற்பாட்டு அறை நிறுவப்பட்டுள்ளது.

கால்நடை கணக்கெடுப்பின்போது ஏற்படக் கூடிய ஏதேனும் சிக்கல்கள் குறித்து விசாரிப்பதற்காக இந்த செயற்பாட்டு அறை நேற்று முன்தினம் (11) முதல் 15ஆம் திகதிவரை செயற்படும் என்று கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஏதேனும் சிக்கல்கள் இருப்பின், செயற்பாட்டு அறையின் தொலைபேசி எண்ணான 011-2034336 ஐ அழைத்து விசாரணைகளை மேற்கொள்ளலாம் என்று அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் வன விலங்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பதற்காக வழங்கப்பட்ட படிவம் உங்களுக்கு கிடைக்கவில்லை என்றால், அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம் என்றும் குறித்த கணக்கெடுப்பு காலத்தில் வரும் விலங்குகளைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள் என்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

சமூக பங்களிப்புடன் நடத்தப்படும் இந்த கணக்கெடுப்புக்கு, சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் அனைத்து பொதுமக்களும் தமது ஆதரவை வழங்குமாறு அமைச்சு மேலும் வலியுறுத்தியுள்ளது.

# மௌலானா ஸலாஹுதீனின் நினைவுச் சொற்பொழிவு


முஸ்லிம் கல்வி முன்னேற்றச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையின் முன்னோடி கலைஞரான மர்ஹூம் கண்டி மௌலானா ஸலாஹுதீன் (பாரி) நினைவுச் சொற்பொழிவும் இப்தார் நிகழ்வும் தென்கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பாயிஸ் முஸ்தபா தலைமையில் நாளைமறுதினம் 15ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

கொழும்பு - 10, புதிய பிரதீபா மாவத்தை, இலக்கம் 26இல் அமைந்துள்ள கிரான் சீனித் வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவாளராக பேருவளை ஜாமிஆ நளீமியா கலைபீடத்தின் முதல்வர் ஏ.சீ. அகார் முஹம்மத் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் ஆலிம்கள், அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் எம்.இசட். அஹமது முன்னவ்வர் தொகுத்து வழங்குவார்.

# வாள்வெட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் மூவர் கைது



(பு.கஜிந்தன்)

கொக்குவில் பகுதியில் வாள்வெட்டில் ஒருவருடைய கைவிரலை வெட்டி வீழ்த்திய சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொக்குவில் ஞானபண்டிதா பாடசாலைக்கு அருகாமையில் இடம்பெற்ற வாள் வெட்டில் ஒருவருடைய கைவிரல் வெட்டி வீழ்த்தப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு கைவிரல் பொருத்தப்பட்டது. இது குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

இந்நிலையில், யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைவாக, யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி கெலும்பண்டாரவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரித்ததன் அடிப்படையில் அவர்களிடம் இருந்து வாள்கள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

இன்னொருவர் சட்டத்தரணி ஒருவர் மூலம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் இரண்டு வாள்களும் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டன. விசாரணையின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அபிவிருத்தியின் பலன்களை நியாயமாக அனுபவிக்கும் சமூகத்தை உருவாக்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு

## ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க





அபிவிருத்தியின் முழுப் பலன்களையும் நியாயமாக அனுபவிக்கும் வளமான சமூகத்தைக் கட்டியெழுப்புவதே தற்போதைய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பென்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் (11) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இக்கருத்துகளைத் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாசாரப் பாதுகாப்புக்காக அரச மற்றும் அரசுசாரா நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார ரீதியாக வலுவூட்டல் தேவைப்படுபவர்களுக்கு கடன் வழங்குவது குறித்தும் இங்கு கவனஞ்செலுத்தப்பட்டதுடன், இதற்காக சமுர்த்தி நிதியிலிருந்து 55 பில்லியன் ரூபாவை ஒதுக்கவும் முன்மொழியப்பட்டது.

தேசிய முன்னுரிமைகள் மற்றும் தேவைகளை அடையாளம் கண்டுகொள்வதுடன், சர்வதேச தரங்களை கருத்திற்கொண்டு பெண்கள், குழந்தைகள், பாதிக்கப்படக்கூடிய மற்றும் வரப்பிரசாதங்கள் கிடைக்காத நபர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வலுவூட்டலுக்குத் தேவையான சட்ட மற்றும் நிறுவன வசதிகளை மேம்படுத்தல் தொடர்பிலும் இதன்போது கவனஞ்செலுத்தப்பட்டது.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் மலர்மதி கங்காதரன், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் அதிகாரிகள் பலரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# மோட்டார் வாகனத் திணைக்கள அதிகாரிகள் உரிய தயார்ப்படுத்தல்களுடன் வரவில்லை

## அரச கணக்குகள் பற்றிய குழு அதிருப்தி: அதிகாரிகளும் திருப்பியனுப்பப்பட்டனர்





மோட்டார் வாகனத் திணைக்களக் குழுவின் முன்னிலையில் கருத்துகளை முன்வைப்பதற்கு உரிய தயார்ப்படுத்தல்களுடன் வராமை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது.

இதற்கமைய மீண்டுமொரு தினத்துக்கு உரிய தயார்ப்படுத்தல்களுடன் வருமாறு கூறி அதிகாரிகள் திருப்பியனுப்பப்பட்டனர்.

மோட்டார் வாகனத் திணைக்களத்தின் 2020, 2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை குறித்து கலந்துரையாடுவதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் தலைமையில் (10) பாராளுமன்றத்தில் கூடியபோதே அதிகாரிகள் இவ்வாறு திருப்பியனுப்பப்பட்டனர்.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கடந்தகாலக் கூட்டங்களில் வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியமை குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. குறிப்பாக, இலங்கை சுங்கத்தின் கணினிக் கட்டமைப்புடன் இணைந்துகொள்வதற்கு முன்னர் இடம்பெற்ற சட்டவிரோத வாகனப் பதிவுகள் தொடர்பில் கணக்காய்வாளர் நாயகத்தால் முன்வைக்கப்பட்ட 25 விடயங்கள் குறித்து நடத்தப்பட்ட விசாரணைகள் மற்றும் அதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கெதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் உள்ளிட்ட தற்போதைய நிலைமைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்தபோதும் அவ்வாறான அறிக்கையெதுவும் சமர்ப்பிக்கப்பட வில்லையென கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

எனினும், அறிக்கையைத் தாம் வழங்கியிருப்பதாக அதிகாரிகள் கூறியபோதும், அவ்வாறான அறிக்கை தமக்குக் கிடைக்கவில்லையென கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்தார். வழங்கப்பட்டதாகக் கூறப்படும் அறிக்கையின் பிரதியே குழுவில் சமர்ப்பிக்கப்பட்டது. அதனைப் பரிசீலித்த கணக்காய்வாளர் நாயகம் அது குறித்துத் தான் திருப்தியடையவில்லையென குழுவில் தெரிவித்தார். அதிலுள்ள விடயங்கள் குறித்து குழு நீண்ட நேரம் கேள்விகளைக் கேட்டபோதும், அதிகாரிகளால் அவற்றுக்குப் பதிலளிக்க முடியவில்லை. பழைய தகவல்கள் தம்மிடம் இல்லையென்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அதிகாரிகள் மீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்திய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, விசாரணைகளை இடைநடுவில் நிறுத்தியதுடன், பிறிதொரு தினத்தில் மீண்டும் அழைப்பதற்குத் தீர்மானித்தது. குறித்த தினத்தில் முழுமையான தயார்ப்படுத்தல்களுடன் வருமாறும் குழு வலியுறுத்தியது.

இக்கூட்டத்தில், குழுவின் உறுப்பினர் களான பிரதியமைச்சர் (மேஜர் ஜெனரல், ஓய்வுபெற்ற) அருண ஜெயசேகர, சுகத் திலகரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் கள் சந்தன சூரியாரச்சி, சட்டத்தரணி சாகரிகா அதாவுடா, ஒஷானி உமங்கா, சுசந்த குமார நவரட்ண, (வைத்தியர்) ஜனக சேனாரத்ன, தினிந்து சமன் மற்றும் லால் பிரேமநாத்,அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# மாணவர் மீது கூட்டுத் தாக்குதல் ஆசிரியருக்கு எதிராக நடவடிக்கை



தனியார் கல்வி நிலைய ஆசிரியர் தனது வகுப்புக்கு வரும் மாணவர்களை தனக்கு முன்னால் அழைத்து வன்முறையில் ஈடுபட்டது குறித்து சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை விசாரணையை ஆரம்பித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடக அமைச்சருமான வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

குறித்த தனியார் கல்வி நிலைய ஆசிரியர் தனது வகுப்புக்கு வரும் மாணவர்களுக்கெதிராக மேற்கொண்ட வன்முறைச் செயல்கள் குறித்து ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

''ஒரு நாகரிக சமூகத்தில் யாரும் அவற்றை அங்கீகரிக்க மாட்டார்கள். அந்தச் சம்பவத்தை நியாயப்படுத்தி யாரும் கருத்துத் தெரிவிக்க வேண்டாம் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த இளம் குழந்தைகள் இது போன்ற உடல் ரீதியான துஷ்பிரயோகம் மூலம் கற்பிக்கப்படவேண்டிய காலம் முடிந்துவிட்டது. அதை யாரும் அங்கீகரிப்பதில்லை. அதை ஆதரிக்கும் விதத்தில் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யாதீர்கள். சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது''- என்றார்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய ஆசிரியரின் தகவல்கள் இந்த நாட்களில் சமூக ஊடகங்களில் பரவலாக விளம்பரப்படுத்தப்படுகின்றன. அதன்படி, ஆசிரியர் ஒரு பெண் மற்றும் ஆண் மாணவர்களை வகுப்பறையின் முன்பக்கத்துக்கு அழைத்து மாணவியை அந்த மாணவனை பிரம்பால் அடிக்கச் செய்யும் காணொளி சமூக ஊடகங்களில் பரவி வருகிறது.

## புலமைப்பரிசில் பரீட்சை மீளாய்வு வெளியாகியது

2024 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் மீளாய்வுப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

www.donest.lk அல்லது www.results.gov.lk எனும் இணையதளங்களுக்குள் பிரவேசித்து பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளமுடியுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# விவாகரத்தை அறிவித்தார் ஹிருணிகா

Hirunika Premachandra
11h ·

After much thought and reflection Hiran and I have decided to separate from our marriage, This decision was made with mutual respect and understanding.
We have spent almost 10 years together. We have created the life of our dreams together. We a truly grateful for the love we got to experience as partners. When we got married we never promised forever because we understood that life can take unexpected turn. Instead we commi to giving our best everyday, and that exactly what we did for many joyful years.
We arrived crossroads where our path diverged. It wasn't a decision taken lightly, we contempla it for months but ultimately came to a decision to give each other independence. We are gratef for the time we've shared.
We wish each other only the best.

Thank you for your kindness, love and being a part of our journey.
Hirunika and Hiran

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தனது கணவன் ஹிரனிடமிருந்து விவாகரத்து பெறவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தனது பேஸ்புக் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவொன்றின் மூலமே இதனை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

நீண்ட யோசனைகளுக்குப் பிறகு இந்த முடிவை எடுத்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கிட்டத்தட்ட 10 வருடங்கள் திருமண வாழ்க்கையில் இணைந்திருந்ததாகவும் ஹிருணிகா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது இலகுவாக எடுக்கப்பட்ட முடிவல்ல எனவும் பல மாதங்கள் இது தொடர்பாக சிந்தித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

# இலங்கை பெண் அரசியல்வாதி நியூஸிலாந்தில் அரசியல் தஞ்சம்




இலங்கையிலிருந்து ஒரு பெண் அரசியல்வாதி அச்சுறுத்தல் காரணமாக நியூசிலாந்துக்கு தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில், 32 வயதான அவருக்கு நியூசிலாந்தில் அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது. எனினும், அவரின் பெயரை ஊடகம் குறிப்பிடவில்லை.

ஒரு முக்கிய அரசியல்வாதியின் நண்பர்கள் தனது வாழ்க்கையை மேம்படுத்த குறித்த அரசியல்வாதியுடன் உடலுறவு கொள்ள வேண்டுமென்று பரிந்துரைத்ததாகவும் அந்தச் சம்பவம் குறித்து ஒரு நண்பர் சமூக ஊடகங்களில் பதிவிட்டதாகவும் குறித்த அந்த இலங்கையின் பெண் அரசியல்வாதி நியூசிலாந்து தீர்ப்பாயம் ஒன்றிடம் சாட்சியமளித்துள்ளார்.

தமது மைத்துனர் உந்துருளி விபத்தில் இறந்தபோது, அந்தப் பிரேதப்பெட்டியில் ஒரு குறிப்பு கண்டெடுக்கப்பட்டது. அதில் தாமே அடுத்ததாக கொல்லப்படப்போவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததென்றும் குறித்த பெண் சாட்சியமளித்துள்ளார்.

தான் இலங்கைக்குத் திரும்பினால் சம்பந்தப்பட்ட அரசியல்வாதி தன்னைக் கொன்றுவிடுவார் என்றும் அந்தப் பெண் அச்சம் வெளியிட்டுள்ளார்.

# இஸ்லாமிய சமய நூல்களுக்கான கட்டுப்பாட்டை தளர்த்தியமைக்கு காரியப்பர் நன்றி தெரிவிப்பு



சமய நூல்களுக்கான கட்டுப்பாட்டைத் தளர்த்தியமைக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். நிஸாம் காரியப்பர் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''இஸ்லாமிய சமய புத்தகங்களுக்கான கட்டுப்பாடு அல்லது தடையைப் பற்றி கடந்த பெப்ரவரி 08 ஆம் திகதி இந்தச் சபையில் நான் கேள்வியெழுப்பியிருந்தேன்.

முன்னைய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட இந்தத் தடை அல்லது கட்டுப்பாடுகளை ஏன் இந்த அரசாங்கம் இன்னும் மீளப் பெறாமல் இருக்கிறது என்று கேட்டிருந்தேன்.

அதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதிலளிக்கையில், நாங்கள் இது சம்பந்தமாக உரிய அறிக்கையைப் பெற்ற பின்பு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார்.

அதன்படி சில தினங்களுக்கு முன்னர் இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியுள்ளதாக அறிகிறோம். இதனடிப்படையில், தடுத்துவைக்கப்பட்ட அல் -குர்ஆன் தப்ஸீர் (மொழிபெயர்ப்பு) நூல்களும் விடுவிக்கப்பட்டிருக்குமென்று நான் நம்புகிறேன்.

என்னுடைய கேள்வி மற்றும் வேண்டுகோளைக் கருத்திற்கொண்டு இத்தீர்மானத்தை மேற்கொண்டமைக்காக விடய அமைச்சர் மற்றும் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்'' - என்றார்.

Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209




# உலகை உலுக்கிய பாகிஸ்தான் ரயில் கடத்தல்

## இதுவரை பயணிகள் 155 பேர் மீட்பு; பயங்கரவாதிகள் 27 பேர் சுட்டுக்கொலை




உலகை உலுக்கிய பாகிஸ்தான் ரயில் கடத்தல் சம்பவத்தில் கடத்தப்பட்டவர்களில் 155 பேரை பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ள நிலையில், துப்பாக்கிச்சூட்டில் பயங்கரவாதிகள் 27 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்திலுள்ள குவெட்டாவிலிருந்து கைபர் பக்துன்குவா மாகாணத்திலுள்ள பெஷாவர் நோக்கி ஜாபர் எக்ஸ்பிரஸ் பயணிகள் ரயில் நேற்றுமுன்தினம் (11) காலை சென்றுகொண்டிருந்த நிலையில், ரயில் தாதர் என்ற இடத்தை அடைந்தபோது, ரயில் எஞ்ஜினுக்கு சில மீற்றர் தூர இடைவெளியில் தண்டவாளத்தில் வெடிகுண்டு வெடித்துச் சிதறியது. இதனால் எஞ்ஜின் ட்ரைவர் ரயிலை நிறுத்தினார்.

உடனடியாக, பிஎல்ஏ (BLA) எனப்படும் பலுச் விடுதலைப் படையைச் சேர்ந்த பயங்கரவாதிகள் ரயிலை முற்றுகையிட்டனர். அவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எஞ்ஜின் ட்ரைவர் உயிரிழந்தார். ரயிலிலிருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட 450 பயணிகளை பயங்கரவாதிகள் சிறைபிடித்தனர். அதன்பின்னர், சிலரை விடுவித்துவிட்டு, 182 பேரை மட்டும் பணயக்கைதிகளாக பிடித்து வைத்தனர்.

அவர்களை மீட்கும் பணியில் பாகிஸ்தான் இராணுவம் ஈடுபட்டுள்ளது. இராணுவத்துக்கும் பயங்கரவாதிகளுக்கும் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பாதுகாப்புப் படையினர் 30 பேர் கொல்லப்பட்டனர். தற்போது மோதலுக்கிடையே பெண்கள் 31 பேர், குழந்தைகள் 15 பேர் உட்பட 155 பேரை பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளனர். பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பயங்கரவாதிகள் 27 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்ட ரயிலில் மீதமுள்ள 250 பயணிகளை மீட்பதற்கான நடவடிக்கைகளில் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனிடையே, பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள சில பயணிகளை மனித வெடிகுண்டுகளாக பயங்கரவாதிகள் வைத்துள்ளதாக வெளியான தகவலால் பாகிஸ்தான் இராணுவத்தினர் அதிர்ச்சியடைந்துள்ளனர். மேலும், 48 மணிநேரத்துக்குள் பாகிஸ்தான் சிறையிலுள்ள அவர்களது அமைப்பைச் சேர்ந்த அனைவரையும் விடுதலை செய்யவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வைத்துள்ளனர்.

நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் முழு ரயிலையும் வெடிக்கச் செய்வோமென்று பயங்கரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளதால் பாகிஸ்தானில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பெஷாவர் மற்றும் குவெட்டா ரயில் நிலையங்களில் பயணிகளின் குடும்பத்தினர் தொடர்புகொள்வதற்காக உதவி மையங்களை இராணுவத்தினர் ஏற்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவத்துக்கு தனி பலுசிஸ்தான் நாடு கோரி பயங்கரவாதச் செயல்களை செய்துவரும் பலூச் விடுதலை இராணுவம் (Balochistan Liberation Army (BLA) பொறுப்பேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் அரசால் பயங்கரவாத அமைப்பு என்று வகைப்படுத்தப்பட்ட இந்த பலூச் விடுதலை இராணுவம், தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா நாளை ஆரம்பம்

## இந்திய - இலங்கை பக்தர்கள் 8,000 பேர் பங்கேற்பு

இந்திய - இலங்கை, இரு நாட்டு மக்களும் கலந்துகொள்ளும் கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா நாளையும் (14) நாளை மறுதினமும் (15) நடைபெறவுள்ளது. திருவிழாவில் இந்திய - இலங்கை பக்தர்கள் 8 ஆயிரம் பேர் பங்கேற்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

கடலில் புயல், இயற்கைச் சீற்றம், பேராபத்து காலங்களில் காப்பாற்றவும் பெருமளவு மீன் கிடைக்கவும் மீனவர்கள் வழிபாடு நடத்திய பின்னரே கடலுக்குள் செல்வது வழக்கம். மீனவர்கள் தங்களின் வழிபாட்டுக்காக கச்சதீவில் சிறிய ஓலைக் குடிசையில் புனித அந்தோனியார் ஆலயத்தை 1913ஆம் ஆண்டில் நிறுவினர். அதன்பின்னர் ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் கச்சதீவில் அந்தோனியார் ஆலய திருவிழா நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டு திருவிழாவில் இந்திய பக்தர்கள் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் மறைமாவட்ட முதன்மை குரு ஜோசப்தாஸ் ஜெபரத்தினம், இராமேஸ்வரம் பங்குத்தந்தை அசோக் வினோவுக்கு அனுப்பிய அழைப்பிதழை ஏற்று, இராமேஸ்வரத்திலிருந்து கச்சதீவு திருவிழாவுக்குச் செல்ல இந்தியாவிலிருந்து 3,464 பக்தர்கள் தங்களின் பெயர்களைப் பதிவுசெய்துள்ளனர்.

கச்சதீவில் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் அந்தோனியார் ஆலய கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து சிலுவைப்பாதை திருப்பலி பூஜையும் இரவு அந்தோனியாரின் தேர் பவனி நிகழ்ச்சியும் நடைபெறும். விழாவின் 2ஆவது நாளான சனிக்கிழமை காலை 7 மணியளவில் திருப்பலி பூஜைகள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலும் நடைபெறும். கூட்டுப்பிரார்த்தனைக்குப் பின்னர் கொடியிறக்கம் நடைபெற்று விழா நிறைவடையும்.

மேலும், கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில் கலந்துகொள்ளும் இந்திய-இலங்கை இருநாட்டு பக்தர்களும் உணவு, தண்ணீர், மருத்துவம் மற்றும் அடிப்படை வசதிகள் யாழ்ப்பாணம் மாவட்ட நிர்வாகம் மற்றும் இலங்கை கடற்படையின் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கச்சதீவு அந்தோனியார் திருவிழாவுக்குச் செல்வோர் மதுபானங்களை எடுத்துச்செல்லவோ மது அருந்திவிட்டுச் செல்லவோ புகை பிடிக்கவோ தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை எடுத்து வரவோ அனுமதி கிடையாது.

மடிக்கணினி (லெப்டொப்), கணினி மற்றும் கெமரா உள்ளிட்ட எலக்ட்ரோனிக்ஸ் பொருட்களை எடுத்து வருவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.



# உக்ரைன் - ரஷ்யா இடையே 30 நாட்கள் போர்நிறுத்தம்!

## பேச்சுவார்த்தையில் ஐந்து முக்கிய முடிவுகளை முன்வைத்த உக்ரைன்



30 நாட்கள் போர்நிறுத்தத்துக்கு உக்ரைன் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், ரஷ்யா இதற்கு சம்மதிக்குமானால் விரைவில் இரு நாடுகளுக்கிடையிலான மோதல் முடிவுக்கு வருமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், ''தற்காலிக போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் தயாராகவுள்ளது. ரஷ்ய ஜனாதிபதி புட்டினும் இதற்குச் சம்மதிப்பாரென நம்புகிறேன்" - என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரஷ்யா - உக்ரைன் போர்நிறுத்தப் பேச்சுவார்த்தையில் 5 முக்கிய முடிவுகளை உக்ரைன் பிரதிநிதிகள் முன்வைத்தனர்.

ரஷ்யா - உக்ரைன் போர்நிறுத்தம் தொடர்பாக சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் அமெரிக்கா மற்றும் உக்ரைன் வெளியுறவு அமைச்சர்கள் செவ்வாய்க்கிழமை (11) பேச்சுவார்த்தை நடத்தினர். பூட்டிய அறைக்குள் சுமார் 7 மணிநேரம் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் முக்கியமான முடிவுகளும் எட்டப்பட்டன.

பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிவுகளாக உக்ரைனுக்கான பாதுகாப்பை அமெரிக்கா உறுதிசெய்ய வேண்டும், ரஷ்யாவுடன் பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலம் 30 நாட்கள் போர்நிறுத்தம் மற்றும் அமைதி பேச்சுவார்த்தையும் நடத்தப்படவேண்டும், உக்ரைன் கைதிகள், பொதுமக்கள், குழந்தைகள் விடுவிக்கப்படவேண்டும், பேச்சுவார்த்தையில் ஐரோப்பாவும் ஒருபகுதியாக இருக்கவேண்டும், உக்ரைனின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா உதவிசெய்வதுடன், கனிமவள ஒப்பந்தம் மூலம் அமெரிக்கா - உக்ரைன் நாடுகளின் நீண்டகால உறவையும் பேணவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவிக்கையில்,

''போர்நிறுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யாவுக்கும் செல்லவிருக்கிறோம். போர்நிறுத்தத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் ஒப்புக்கொள்வாரென்று நம்புகிறோம். எங்களால் முடியாவிட்டால், நாங்கள் தொடர்ந்து செய்துகொண்டே இருப்போம்'' என்று தெரிவித்தார்.

மேலும், ஜித்தா பேச்சுவார்த்தை குறித்து உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தெரிவிக்கையில்,

''உக்ரைன் தரப்பு வாதங்களைப் புரிந்துகொண்டு பரிசீலிக்கும் அமெரிக்காவுக்கும் ஜனாதிபதி ட்ரம்ப்புக்கும் நன்றி. இந்த முன்மொழிவை ஏற்க உக்ரைன் தயாராகவுள்ளது. ரஷ்யாவையும் அவ்வாறே செய்யச்சொல்வது அமெரிக்காவின் பொறுப்பே. ரஷ்யா ஒப்புக்கொண்டால், போர்நிறுத்தம் உடனடியாக நடைமுறைக்கு வரும்.

போரின் முதல் நொடியிலிருந்தே உக்ரைன் அமைதியைத்தான் நாடுகிறது. மேலும், போர் மீண்டும் வராமல் தடுக்க முடிந்தவரை விரைவாகவும் நம்பகமான முறையிலும் அதனை அடைய எல்லாவற்றையும் செய்ய விரும்புகிறோம்'' - என்று தெரிவித்தார்.

# இந்த நாற்காலிதான் எனக்கு வேண்டும்

## கனடா பாராளுமன்றிலிருந்து தனது இருக்கையை தூக்கிச்சென்ற ட்ரூடோ



கனடா பாராளுமன்றத்திலிருந்து தனது நாற்காலியுடன் நாக்கை நீட்டியபடி அந்நாட்டின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளியேறிய புகைப்படம் இணையத்தில் வைரலாகியுள்ளது.

கனடா முன்னாள் பிரமர் ஜஸ்டின் ட்ரூடோ, கடந்த ஜனவரியில் தன் பதவியை இராஜிநாமாச் செய்தார். இந்தாண்டு தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், மக்களின் செல்வாக்கை இழந்ததால், கட்சியின் ஒரு பிரிவினரின் நெருக்கடியைத் தொடர்ந்து அவர் தமது பதவியை இராஜிநாமாச் செய்தார்.

கட்சிக்கு புதிய தலைவரைத் தெரிவுசெய்யும்வரை, பிரதமராக அவர் தொடருவாரென்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஒரு மாதத்துக்கு மேலாக நடந்த பல கட்ட ஆலோசனைகளைத் தொடர்ந்து, கட்சியின் தலைவராக மார்க் கார்னி நேற்றுமுன்தினம் தெரிவுசெய்யப்பட்டார். அடுத்த சில நாட்களில் அவர் பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (11) புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள மார்க் கார்னியை ஜஸ்டின் ட்ரூடோ சந்தித்தார். இருவரும் சில மணிநேரம் ஆலோனை நடத்தினார். இதற்கிடையே தனது பதவிக்காலம் முடிவடைவதால், ஜஸ்டின் ட்ரூடோ தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

அவர் பாராளுமன்றத்திலிருந்து தனது நாற்காலியுடன் நாக்கை நீட்டியபடி வெளியேறினார். இந்தப் புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது. இது குறித்து சமூகவலைத்தளத்தில் நெட்டிசன்கள் தங்களில் கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# பெண்களை ஒடுக்கும் சட்டங்களை மாற்றவேண்டியது காலத்தின் தேவை

## கலாநிதி பிரதிபா மஹாநாமஹேவா தெரிவிப்பு



(எம்.ஏ.அமீனுல்லா)

இலங்கையில் கடந்த மாதத்தில் மட்டும் இணையவழியூடாக 1,371 பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளதாக இலங்கை செர்ட் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீ பாலி வளாகத் தலைவர் கலாநிதி பிரதிபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டி மாவட்டப் பிராந்திய அலுவலகத்தினால் கண்டி ஈ.எல். சேனநாயக்க சிறுவர் நூலக கேட்போர் கூடத்தில் 10 ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

''சமூக ஊடகங்களை கடந்த வருடம் தவறாகப் பயன்படுத்தி பெண்கள் மற்றும் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவங்கள் தொடர்பான 20,030 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக இலங்கை செர்ட் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

திருமணத்துக்கான குறைந்தபட்ச வயது 18 ஆண்டுகளென்றாலும் 10 வயது பிள்ளைகளுக்கு கூட சமூக ஊடகங்களை அணுகும் திறன் உள்ளது. ஏனைய நாடுகள் இந்த விடயத்தில் வயது வரம்புகளை அறிமுகப்படுத்தியுள்ளன. இதைப் பற்றி நாம் அதிகம் அலட்டிக்கொள்ளாததால் இணையவழி மூலம் சிறுபிள்ளைகள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் செய்திகள் அதிகரித்து வருகின்றன.

மசாஜ் நிலையங்களில் கூடுதலான பெண்கள் பணிபுரிகின்றனர். இவற்றுள் 24 மணி நேர சேவைகளை வழங்கும் இடங்களும் உள்ளன. இவற்றில் பெண்கள் பாலியல் ரீதியாக சுரண்டப்படுகிறார்கள். இந்தப் பணிபுரியும் இளம் பெண்களை விபசாரிகளாக பொலிஸார் முத்திரை குத்துகின்றனர்.

கீழ்மட்டத்திலுள்ள மசாஜ் நிலையங்களில் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டாலும் நட்சத்திர ஹோட்டல்களில் இவ்வாறு சுற்றிவளைப்புகளை பொலிஸார் நடத்துவதில்லை.

கைதுசெய்யப்பட்ட பெண்கள் திருமண சட்டத்தின் கீழ் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். இது மிகவும் பழைய சட்டமாகும். ஆகவே, பெண்களை ஒடுக்கும் வகையில் பல சட்டங்கள் உள்ளன. அவை மாற்றப்பட வேண்டும்.

மத்திய கிழக்கு நாடுகளில் நமது பெண்கள் பெரிதும் ஒடுக்கப்படுகிறார்கள். மத்திய கிழக்கு நாடுகளில் 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளைக் கூட ஆள்மாறாட்டம் செய்து வேலைக்கு அனுப்பும் சம்பவங்கள் உள்ளன.

அப்படி வெளிநாடுகளுக்குப் பயணம் செய்த பெண்தான் ரிசானா நபீக். அப்பெண் பராமரித்த சிறு குழந்தை மூச்சுத் திணறி இறந்ததால் அவளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவளை சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்றவர்கள் மீது என்ன சட்டம் உள்ளதென்பது ஒரு கேள்வியாக இன்னும் தொக்குநிற்கிறது''- என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் ஜி புஞ்சிஹேவா உரையாற்றுகையில்,

''காதி நீதிமன்றங்களில் முஸ்லிம் பெண்கள் கடுமையான பாரபட்சம் காட்டப்படுவது குறித்து எங்களுக்கு புகார்கள் கிடைத்துள்ளன. தற்போதுள்ள சில சட்டங்களால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள் தான்.

காதி நீதிமன்றங்களுக்கு பெண்களை நியமிக்க பல கலந்துரையாடல்கள் நடந்த போதிலும் இதுவரை எந்தவொரு உடன்பாடும் எட்டப்படவில்லை.

உடரட்ட சட்டம், முஸ்லிம் விவாக சட்டம், தேசவழமைச் சட்டம் என பெண்களை பாரபட்சம் காட்டும் சட்டங்கள் ஏராளமாக உள்ளன.

ஓர் ஊழியருக்கு மகப்பேறு விடுமுறைகள் இத்தனை இருப்பதாக சொல்லப்பட்ட போதிலும் தோட்டப் பெண்களுக்கு அந்த உரிமை கிடைக்கப் படுகின்றனவா? சுதந்திரப் போராட்டங்களில் ஆண்களின் பெயர்கள் பேசப்படுகின்றன. இந்தப் போராட்டங்களுக்கு உயிர் கொடுத்த பெண்களும் உள்ளனர். அவர்களின் பெயர்கள் கூட சமூகத்துக்குத் தெரியாது''- என்றார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் கமலா லியனகே, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டி மாவட்ட இணைப்பாளர் விரஞ்சன் டயஸ் சுமனசேகர,மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் பணிப்பாளர் திருமதி எஸ். லோகேஸ்வரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# வாகன விபத்து; மூவர் படுகாயம்



நுவரெலியா-கந்தபொல வீதி பொரலந்த பகுதியில் கார் ஒன்று விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த தாய், மகள் உட்பட மூவர் காயமடைந்து நுவரெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை (10) இடம்பெற்றுள்ளது.

கந்தபொலயிலிருந்து நுவரெலியாவுக்குச் சென்ற கார் வீதியை விட்டு விலகி தேயிலைத் தோட்டத்தில் சுமார் 15 அடி பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளாகியது.

இச்சம்பவத்தில் காரில் பயணித்த முன்பள்ளி மாணவி, அவரது தாயார் மற்றும் கார்ச் சாரதி ஆகியோர் காயமடைந்தனர்.விபத்து குறித்து நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கூரிய ஆயுதத்தால் மனைவியையும் மகளையும் தாக்கிய குடும்பஸ்தர் தூக்கிட்டுத் தற்கொலை

(ராமு தனராஜா)

குடும்பஸ்தரொருவர் தனது மனைவியையும் மகளையும் கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்திவிட்டு தானும் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இச்சம்பவம் பதுளை,மடுல்சீமை ரோபேரி தோட்டத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்தனர்.

மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிட்டமாறுவ- ரோபேரி பகுதியில் வசிக்கும் குறித்த நபர் நேற்றுமுன்தினம் இரவு தனது மனைவி மற்றும் மகளுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக அவர்கள் இருவரையும் கூரிய ஆயுதத்தால் வெட்டி காயப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், சத்தம் கேட்டு அங்கு வந்த அயலவர்கள் படுகாயமடைந்த பெண்ணையும் அவரது மகளையும் மீட்டு ரோபேரி வைத்தியசாலையில் அனுமதித்தனர். பின்னர் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்நிலையில் சந்தேகநபரான குறித்த குடும்பஸ்தர் நேற்றுமுன்தினம் இரவு முதல் காணாமல் போயுள்ளார். அயலவர்கள் அவரைத் தேடிச்சென்ற போது பக்கத்து வீட்டுக்காரர் ஒருவரின் மரக்கறித் தோட்டத்திலுள்ள புளியமரத்தில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட நிலையில் மீட்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மடுல்சீமை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# லொஹான் ரத்வத்த பொதுஜன பெரமுனயில் இணைவு

(எம்.ஏ.அமீனுல்லா)

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனயின் கருத்துக்கெதிராக செயற்பட்டு ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காகத் தன்னை அர்ப்பணித்து பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் அரசியலிலிருந்து விலகியிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனயில் இணைந்து மீண்டும் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனயின் கண்டி மாவட்டத் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தான் தயாரெனவும் லொஹான் ரத்வத்த மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் (11) கண்டியில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.கடந்த பொதுத் தேர்தலில் தான் போட்டியிடவில்லையென்றும் பல அசம்பாவிதங்கள் காரணமாக கண்டியிலுள்ள கட்சி அலுவலகம் மூன்று மாதங்களாக மூடப்பட்டிருந்ததென்றும் தெரிவித்த அவர், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனயின் வெற்றிக்கு முழுமையாக பங்களிப்பாதாகவும் அவர் கூறினார் .

# ஆட்டுக்கு புல்லு வெட்டச் சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(பொகவந்தலாவ நிருபர்)

பொகவந்தலாவ லெச்சுமிதோட்டம் மத்திய பிரிவு பத்தாம் இலக்க தேயிலை மலைக்கருகாமையிலுள்ள கால்வாயொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சடலம் நேற்றுமுன்தினம் (11)செவ்வாய்க்கிழமை இரவு மீட்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த நபர் செவ்வாய்க்கிழமை காலை ஆட்டுக்கு புல் வெட்டச் சென்ற நிலையில் இரவு ஏழுமணி வரை வீடு திரும்பாததால் தோட்ட மக்கள் இணைந்து அவரை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது கால்வாயொன்றில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இதுகுறித்து பொகவந்தலாவ பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்து தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் பொகவந்தலாவ லெட்சுமி தோட்டம் மத்திய பிரிவைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 57வயதுடைய சிவனு பாக்கியநாதன் என்பவராவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஊழலற்ற நிர்வாகத்தினூடாக மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க அரச சேவையை டிஜிட்டல்மயமாக்குங்கள்

## சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை



(யாழ். நிருபர்)

''நாட்டில் ஊழலற்ற அரச நிர்வாக முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கும் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கும் அரசாங்கத்தின் அனைத்து துறைகளிலும் டிஜிட்டல்மயமாக்கல் மிகவும் முக்கியமானது'' - என்று தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

''டிஜிட்டல்மயமாக்கலென்பது நவீன பொருளாதாரத்தின் அடித்தளமாகும். உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளில் பொதுமக்களுக்கான சேவைகள் அனைத்தும் டிஜிட்டல்மயப்படுத்தப்பட்டுள்ளன. நவீன டிஜிட்டல் மயமாக்கலில் கண்ணால் பணத்தைப் பார்க்காமலேயே கொடுக்கல் வாங்கல் நடைபெறுகின்றது. வங்கி நடைமுறைகளில் ஏற்பட்ட டிஜிட்டல் புரட்சியே அதற்குக் காரணம். டிஜிட்டல் முறைமையானது பாதுகாப்பானது; விரைவானது; நேர விரயமற்றது; சிக்கனமானது; ஊழலற்ற நிர்வாக நடைமுறையை ஏற்படுத்தும். இலங்கையில் குறிப்பிட்ட சில துறைகள் ஏற்கனவே டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளன. எனினும், அனைத்துத் துறைகளிலும் டிஜிட்டல் மயமாக்கல் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

இந்த அரசாங்கத்தின் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தில் முக்கிய அங்கமாக டிஜிட்டல்மயமாக்கல் உள்வாங்கப்பட்டுள்ளது. அத்துடன், 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 21.8 பில்லியன் ரூபா டிஜிட்டல்மயமாக்கலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.

இதில் 7.1 பில்லியன் டிஜிட்டல் பொருளாதார அமைச்சுக்கும் 14.7 பில்லியன் ஏனைய அமைச்சுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, உணவுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக நலன்புரி ஆகிய துறைகளில் டிஜிட்டல்மயமாக்கலுக்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்தை அதிகரிக்க ஏற்பாடுகளைச் செய்வதனூடாக சபைகள் தமது சொந்த வருமானத்தில் கிடைக்கின்ற நிதியிலிருந்து கிராமிய அபிவிருத்தியை செய்துகொள்ள முடியும். இதுவே நிலைபேறான அபிவிருத்தியாகும். இதற்காக உள்ளூராட்சி மன்றங்களின் வருமான மூலங்களான சொத்துவரி அறவீடு, வருமான வரி அறவீடு என்பவற்றை டிஜிட்டல்மயப்படுத்த வேண்டும்.

எமது மாவட்டங்களில் நகரசபை, பிரதேச சபைகளில் ஆதனவரியைச் செலுத்துவதற்கு நேரடியாகச் சென்றே கருமபீடத்தில் பணம் செலுத்தவேண்டியுள்ளது. வங்கி முறைமைகள் போன்று வரிசெலுத்தும் முறைமைகளை டிஜிட்டல்மயப்படுத்தினால் பொதுமக்கள் தங்களின் கைத்தொலைபேசியிலிருந்தே வரியைச் செலுத்தக்கூடியதாக இருக்கும்.

இதேபோன்று, இலங்கையில் அரச நிர்வாகத் துறைகளில் மிகவும் தாமதமாக இயங்குகின்ற ஒரு துறையென்றால் அது காணி நிர்வாகம் தான். சில காணிப்பிரச்சினைகளைத் தீர்க்க 20-25 வருடங்கள் செல்கின்றன. இதனால் காணி உரிமையாளரின் இறப்புச்சான்றிதழைச் சமர்ப்பித்து காணி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளும் அவலநிலை காணப்படுகின்றது.

எனவே, முன்னுரிமை அடிப்படையில் காணி நிர்வாகம் சார்ந்த துறையில் டிஜிட்டல் முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்தி விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன், இலங்கையில் அதிகம் வீதி விபத்துகள் மூலம் பலர் உயிரிழக்கின்றார்கள். பலர் அங்கவீனமாகின்றார்கள். இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் போக்குவரத்து விதிமுறைகளைச் சரியாக மக்கள் பின்பற்றாமை முக்கியமான காரணமாகும். இதற்கு பொதுமக்கள் மட்டுமல்ல போக்குவரத்து விதிமுறைகளைக் கண்காணிக்கும் பொலிஸாரும் காரணமாகும்.

வீதி விபத்துகளை மீறுவோருக்கெதிராக அறவிடப்படும் தண்டப்பணம் செலுத்தப்படும் முறைமை இங்குள்ள பாரிய பிரச்சினையாகும். போக்குவரத்துப் பொலிஸார் விரும்பினால் மட்டுமே தண்டப்பணம் அறவிட முடியும். அல்லது வாகன ஓட்டுநருக்கும் கடமையிலுள்ள பொலிஸாருக்குமிடையில் நடைபெறும் பேரம்பேசல் விதிமுறைகளை மீறியவர்கள் இலகுவாக தண்டனையிலிருந்து தப்பிக்கொள்ள வழிவகுக்கின்றது.

இங்கு நான் அனைத்து பொலிஸாரையும் குற்றஞ்சொல்ல விரும்பவில்லை. எனவே, வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளதுபோன்று வீதிகளின் முக்கியமான இடங்களில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படல் வேண்டும். விதிமீறுவோருக்கெதிராக டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட கட்டண அறவீடு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். தொடர்ச்சியாக விதிமீறலில் ஈடுபடுவோரின் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்படல் வேண்டும்.

மருத்துவத்துறையை எடுத்துக்கொண்டால் நோயாளிகள் தொடர்பான தரவுகள் டிஜிட்டல் மயப்படுத்தப்படாமையால் அவற்றைச் சேகரித்து வைப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன. அத்துடன், ஒரு வைத்தியசாலையில் பல ஆயிரம் ரூபா செலவில் செய்யப்படும் மருத்துவப் பரிசோதனையையே அந்த நோயாளி பிறிதொரு வைத்தியசாலைக்குச் செல்லும்போது மீண்டும் செய்யவேண்டியுள்ளது. எனவே, நோயாளி தொடர்பான தரவுத்தளம் இருந்தால் நாட்டின் எந்தவொரு வைத்தியசாலையிலிருந்தும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

# யாழ். செயலகத்தின் முக்கிய அறிவிப்பு

(யாழ். நிருபர்)

இதுவரை பிறப்புச் சான்றிதழைப் பதிவுசெய்யாத பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான நடமாடும் சேவை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நாளை 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணிவரை அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

எனவே, தேவையானவர்கள் உரிய ஆவணங்களுடன் சென்று பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்று பயனடையுமாறு யாழ். மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

# இலங்கையில் முதன்முறையாக இலத்திரனியல் முறையில் வாக்களிப்பு: வவுனியா மாணவன் சாதனை!







(சிவகுமார் திவியா)

இலங்கையில் முதல் தடவையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தினூடாக வாக்களிப்பு மேற்கொண்டு வவுனியா மாணவன் சாதனை படைத்துள்ளார்.

வவுனியா விபுலானந்தா கல்லூரியில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற மாணவர் பாராளுமன்றத் தேர்தலுக்கே இலத்திரனியல் முறையில் வாக்களிப்பு இடம்பெற்றது.

பாடசாலை மட்டத்தில் மாணவர் பாராளுமன்றத் தேர்தல் தற்போது இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில், வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவன் கபிலாசால் அண்மையில் புத்தாக்கப் போட்டிக்காக கண்டுபிடிக்கப்பட்டு தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்களிப்பு இயந்திரத்தைப் பயன்படுத்தி வாக்களிப்பு செயற்பாடு இடம்பெற்றிருந்தது.

மாணவனால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் இலங்கையில் ஒரு தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தமையானது இதுவே முதல் தடவையாகும்.

இலங்கை தேர்தல் முறைமையில் கடதாசி பாவனை இல்லாது இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையை அறிமுகப்படுத்த வேண்டுமென்கின்ற நோக்கோடு குறித்த மாணவரால் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் பொறிமுறை முதல் தடவையாக மாணவர் பாராளுமன்றத்துக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த ஆரம்ப நிகழ்வு வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன், பாடசாலை அதிபர், அயல் பாடசாலை அதிபர்கள், கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் உட்படப் பலர் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, வாக்களிப்பும் இடம்பெற்றிருந்தது. இதன்பின்னர் குறுகிய நேரத்தில் முடிவுகள் வெளியிடப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

# 17 ஆண்டுகளின் பின் இலங்கை மண்ணில் நடைபெறவுள்ள SAFF சம்பியன்ஷிப்







**(அகீல் சிஹாப்)**

தெற்காசியாவின் உதைபந்து உலகக்கிண்ணம் என வர்ணிக்கப்படும் 15ஆவது தெற்காசிய உதைபந்து கூட்டமைப்பு (SAFF) சம்பியன்ஷிப் தொடரை நடத்தும் உரிமையை இலங்கை பெற்றுள்ளது. இதன்மூலம் 17 ஆண்டுகளுக்குப் பிறகு, பிராந்தியத்தின் சிறந்த உதைபந்து நாடுகளை இந்தியப் பெருங்கடலின் முத்துக்கு வரவேற்கும் வாய்ப்பை இலங்கை மீண்டும் பெற்றுள்ளது.

நேபாளத்தின் காத்மண்டுவில் இருக்கும் இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமரின் முறையான கோரிக்கையைத் தொடர்ந்து, தெற்காசிய உதைபந்து கூட்டமைப்பு உறுப்பு நாடுகளால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு இலங்கை கால்பந்துக்கு ஒரு வரலாற்று தருணமாக அமைந்துள்ளது. ஏனெனில், இலங்கை கடந்த 2008ஆம் ஆண்டு கடைசியாக சம்பியன்ஷிப்பை மாலைதீவுடன் இணைந்து நடத்தியது. இந்நிலையில் இந்த ஆண்டு ஜூன் மாதம் இலங்கை தனித்து இந்தத் தொடரை நடத்தவுள்ளது.

இலங்கை உதைபந்து அணி கடந்த 1995ஆம் ஆண்டு சொந்த மண்ணில் முதல் தெற்காசிய உதைபந்து சம்பியன்ஷிப் தொடரை வென்றது. அன்று முதல் இன்று வரை ஒரேயொரு தொடராக இது மட்டுமே உள்ளது. 2025ஆம் ஆண்டில் போட்டியை நடத்துவது இலங்கைக்கு 30 ஆண்டுகளுக்குப் பிறகு சம்பியன்ஷிப்பை மீட்டெடுக்கவும் உதைபந்தில் தேசிய பெருமையை மீண்டும் உயர்த்தவும் ஒரு பொன்னான வாய்ப்பை வழங்குகிறது.

இந்தப் போட்டியில் ஏழு தெற்காசிய நாடுகள் பங்கேற்கவுள்ளன. இந்தியா (நடப்பு சம்பியன்கள் மற்றும் 09 முறை சம்பியன் பட்டம் வென்றவர்கள்), பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவுகள், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய அணிகள் பங்கேற்கும்.




சொந்த மண்ணில் ரசிகர்களின் ஆதரவைப் பெற்று, இலங்கை தேசிய அணி, போட்டியில் சிறப்பாக செயற்பட்டு, சம்பியன்ஷிப் கிண்ணத்தை மீண்டும் இலங்கை மண்ணுக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பீபா கிளப் உலகக்கிண்ணத்தின் பரிசுத்தொகை 01 பில்லியன் - பீபா அறிவிப்பு

**(அகீல் சிஹாப்)**




பீபா கிளப் உலகக்கிண்ண தொடர் எதிர்வரும் ஜூன் 14 முதல் ஜூலை 15 வரை அமெரிக்காவில் நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடரின் பரிசுத்தொகையாக 01 பில்லியன் டொலர் வழங்கப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் 32 அணிகள் கலந்து கொள்ளும் நிலையில் வெற்றிபெறும் அணிக்கான பரிசுத்தொகை மற்றும் யார் யாருக்கு எவ்வளவு என்பது குறித்த விபரங்கள் அறிவிக்கப்படவில்லை. அணிகளின் செயற்திறன் அடிப்படையில், பரிசுத்தொகை வழங்கப்படும் எனக் கூறப்படுகிறது.

இதற்கான உலகளாவிய ஒளிபரப்பு உரிமையை லண்டனை தளமாக கொண்ட DAZN நிறுவனம், இதே அளவிலான தொகைக்கு கைப்பற்றியுள்ளது. இதன் 63 போட்டிகளுக்கான டிக்கெட் விற்பனை மூலம், 500 மில்லியன் டொலர் அளவுக்கு வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.




போட்டியின் மூலம் கிடைக்கும் அனைத்து வருமானமும் பங்கேற்கும் கழகங்களுக்கும் உலகம் முழுவதும் உள்ள கழக ஒற்றுமை மூலமாகவும் பகிர்ந்தளிக்கப் படும் என பீபா தலைவர் கியானி இன்பான்டினோ தெரிவித்துள்ளார். மேலும், 2028ஆம் ஆண்டு மகளிர் கிளப் உலகக்கிண்ணம் நடத்தப்படும் என அறிவித்துள்ளார்.

## தும்பங்கேணி கண்ணகி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி -2025



**(குருக்கள்மடம் செய்தியாளர்)**

மட்/பட்/ தும்பங்கேணி கண்ணகி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் வித்தியாலய அதிபர் மு.அருந்தவகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பட்டிருப்பு கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சி.சிறீதரன் கலந்து சிறப்பித்தார். இதன்போது நாவலர், பாரதி என இரு இல்லங்களாக பிரிக்கப்பட்டு மாணவர்களின் திறனாய்வு போட்டிகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வுக்கு விசேட அதிதிகளாக மட்டக்களப்பு, திருகோணமலை காணி சீர்திருத்த ஆணையாளர் நே.விமல்ராஜ், பட்டிருப்பு கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர், பட்டிருப்பு கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சுரேஸ் உட்பட அதிகாரிகள், பொதுமக்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## விளையாட்டுத் துளிகள்

ஐ.பி.எல். முன்னாள் சம்பியனான குஜராத் டைட்டன்ஸ் அணியின் உப பயிற்சியாளராக அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் மேத்யூ வேட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 2022 மற்றும் 2024 ஐ.பி.எல். சீசன்களில் குஜராத் அணியில் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

★★★★★★★★★★★★★★★

இடதுகால் முட்டியில் ஏற்பட்ட உபாதையால் நிறைய போட்டிகளை தவறவிட்ட 33 வயதான நட்சத்திர வீரர் நெய்மார் ஒன்றரை ஆண்டுக்கு பிறகு பிரேஸில் அணிக்கு திரும்பியுள்ளார். பீபா உலகக்கிண்ண தென்அமெரிக்க கண்ட தகுதி சுற்றில் முன்னாள் சம்பியன் பிரேஸில் அணியானது 20ஆம் திகதி கொலம்பியாவையும் 25ஆம் திகதி நடப்பு சம்பியன் அர்ஜென்ரீனாவையும் சந்திக்கிறது.

★★★★★★★★★★★★★★★

பாகிஸ்தான் அணியுடனான 05 போட்டிகள் கொண்ட ரி20 தொடர் எதிர்வரும் 16ஆம் திகதி கிறிஸ்ட்சர்ச்சில் ஆரம்பமாகும் நிலையில் தொடருக்கான நியூஸிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொடருக்கான புதிய கெப்டனாக சகலதுறை வீரர் மிக்கேல் பிரெஸ்வெல் நியமிக்கப்பட்டுள்ளார்.

★★★★★★★★★★★★★★★

ஐ.சி.சி. தொடர்களின் (ஒருநாள் மற்றும் ரி20 உலகக்கிண்ணம், சம்பியன்ஸ் கிண்ணம், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்) இறுதிப்போட்டியில் ஆட்ட நாயகன் விருது வென்ற 2ஆவது இந்திய வீரராகவும் ஒட்டுமொத்தத்தில் 4ஆவது கெப்டனாகவும் ரோஹித் சர்மா இடம்பிடித்தார். இதற்கு முன்னர் கிளைவ் லாயிட், ரிக்கி பொண்டிங், டோனி ஆகியோர் இந்த சாதனையை படைத்துள்ளனர்.

## மட்டக்களப்பு நிவ் ஈஸ்டன் அணி சம்பியன்




**(கிண்ணியா செய்தியாளர்)**

லெஜெண்ட்ரி கிரிக்கெட் அகடமியின் உரிமையாளரும் பிரதான பயிற்றுவிப்பாளருமான ஜோன் பிரிட்டோ ஜெரோம் லக்ஷ்மன் தலைமையில் திருகோணமலை லெஜன்டரி கிரிக்கெட் எகடமி மற்றும் மட்டக்களப்பு நிவ் ஈஸ்டன் ஸ்டார் கிரிக்கெட் எகடமிக்கிடையிலான பெட்டல் ஒவ் த ஈஸ்ட் ஜூனியர் இரண்டாவது பிரதான தொடர் போட்டி அண்மையில் திருகோணமலை நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு நிவ் ஈஸ்டன் ஸ்டார் கிரிக்கெட் அணியினர் சம்பியனாகத் தெரிவாகினர். குறித்த போட்டியில் பிரதம விருந்தினராக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் என்.மதிவண்ணன் கலந்துகொண்டு வெற்றிக் கேடயங்களை வழங்கி வைத்தார்.

## ஐ.பி.எல். தடையை எதிர்கொள்ளும் புரூக்?




ஐ.பி.எல். தொடரிலிருந்து தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் விலகி இருக்கும் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர் ஹரி புரூக் இரண்டு ஆண்டு தடையை எதிர்கொள்ளும் நெருக்கடியை சந்தித்துள்ளார். டெல்லி கெப்பிட்டல் அணியால் வாங்கப்பட்ட புரூக், இங்கிலாந்து அணிக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இம்முறை ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு அவர் தனது பாட்டியின் மரணம் காரணமாக ஐ.பி.எல். இல் இருந்து விலகினார். இந்நிலையில் ஐ.பி.எல். தொடரில் தெரிவு செய்யப்பட்ட பின் வெளியேறினால் இரு பருவங்களுக்கு தடை செய்யப்படும் என்று இந்த ஆண்டு புதிய விதி கொண்டுவரப்பட்டுள்ளது. இதில் உபாதை மற்றும் மருத்துவ காரணங்களுக்கு மாத்திரம் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7